விலை ரூபா: 6.00 பக்கங்கள்:-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
VALAMPURI

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 மாசி 04 ஞாயிற்றுக்கிழமை (16.02.2003) தொலைபேசி~ 2223378 ஒலி 59

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சீமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

## ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுத்தால் இலங்கையில் சமாதான முயற்சி பாதிப்படையும்

# இந்தியாவின் உதவி இல்லாமல் இனப் பிரச்சினைக்குத் தீர்வில்லை!

## ஜப்பான் தூதுவர் அகாஷி கருத்து

(நமது நிருபர்)

**ஈராக் மீது அமெரிக்கா போர் தொடுக்குமாக இருந்தால் இலங்யையில் கடந்த 2 தசாப்தகாலமாக நடைபெற்று வந்த இன மோதல்களுக்கு தீர்வுகாணும் முகமாக நடைபெற்றுவரும் சமாதான முயற்சிகள் இக்கட்டான சூழ்நிலைக்கு தள்ளப்பட்டு வ்டுமென ஜப்பானின் ச்றப்புத் தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்துள்ளார்.**

நான்கு நாள் உத்தியோகபூர்வ விஜயத்தை மேற் கொண்டு கொழும்பு வந்திருந்த ஜப்பான் விஷேட தூதுவர் யசுசி அகாஷி ஜனாதிபதி, பிரதமர் மற்றும் முக்கிய தலைவர்களைச் சந்தித்தபின் ஹில்ட்டன் ஹோட்டலில் நேற்று செய்தியாளர் மாநாடு ஒன்றை நடத்தினார் அச் செய் தியாளர் மாநாட்டில் செய்தியாளர் ஒருவரின் கேள்விக்கு பதிலளிக்கை யிலேயே மேற்கண்டவாறு யசுசி அச்சம் தெரிவித்துள்ளார்.

இம் மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில்;

இலங்கையின் சர்வதேச வெளி விவகார ஆலோசகராக நான் கடமையாற்றுவதாக எதிர்க் கட்சியினர் குற்றம் சாட்டியுள்ளனர்.இதைப் பத் திரிகைவாயிலாகப் பார்த்த நான்

(10ம் பக்கம் பார்க்க)

## பெண் போராளிகளிடம் வாக்குமூலம் பெற்றனர்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாயில் இராணுவத்தினர் மேற் கொண்ட தாக்குதலில் காயமடைந்த விடுதலைப் புலிக ளின் பெண் போராளிகளின் வாக்கு மூலங்களை,குற்றப் புலனாயவுப் பிரிவுப் பொலிசார் நேற்றுப் பதிவு செய்தனர்.

யாழ்.போதனா வைத்தியசாலை யில் சிகிச்சை பெற்றுவரும் மேற் படி பெண் போராளிகளை வைத் தியசாலையில் பார்வையிட்ட குற்றப புலனாய்வுப் பிரிவு பொலிஸார், அங்கு அவர்களின வாக்கு மூலங்களைப் பெற்றுக் கொண்டனர்.

அத்துடன் சம்பவத்தில் காய மடைந்த பொது மக்களின் வாக்கு மூலங்களையும் அவர்கள் பதிவு செய்தனர்.

(இ-4)

## புலிகள் மீதான தடையை அமெரிக்கா நீக்கும்!

### பிரதி அமைச்சர் ஆம்டேஜ் நம்பிக்கை

(நியுயோர்க்)

தமிழீழ விடுதலைப் புலிகள் மீதான தடையை தமது அரசாங்கம் நீக்கும் வாய்ப்புக்கள் இருப்பதாக அமெரிக் காவின் பிரதி இராஜாங்க அமைச்சர் ஆம்டேஜ் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமாதான முயற் சிகள் குறித்து அமெரிக்காவில் கலந்துரையாடல் ஒன்று அண்மை யில் இடம்பெற்றது அக்கலந் துரையடலில் கலந்து கொணடு உரையாற்றும் போதே ஆம்டேஜ் இதனைக் குறிப்பிட்டார்.

அங்கு அவர் மேலும் பேசுகையில் விடுதலைப் புலிகள் ஆயுதப் போராட்டத்தைக் கைவிட்டு சமாதான வழியில் இனப் பிரச்சினைக் குத் தீர்வு காண்பதற்கு ஒத்துழைத்தால அமெரிக்காவில் தடை செய்யப்பட்ட பட்டியலில் இருந்து விடுதலைப் புலிகளின் பெயர் நீக்கப்படும்,

(10ம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய்ச் சம்பவத்திற்கு வன்னியிலும் கண்டனப் பேரணி

(கிளிநொச்சி,வவுனியா நிருபர்கள்)

மானிப்பாயில் நிராயுத பாணிகளான விடுதலைப் புலிகளின் பெண் போரா ளிகள் மீது மானிப்பாய் இராணுவத் தினர் மேற் கொண்ட தாக்குதலைக் கண்டித்து மாபெரும் கண்டனப் பேரணி கள் கிளிநொச்சியிலும்,வவுனியா விலும் நடத்தப்பட்டன.

கிளிநொச்சி டிப்போச் சந்தியில் இருந்தும் கரடிப் போக்குச் சந்தியில் இருந்தும் ஆரம்பித்த கண்டனப் பேரணி ஊர்வலமாகச் சென்று கிளிநொச்சிஅரச அதிபரிடமும் யுத்த நிறுத்தக் கண்காணிப்பு குழுவினரி டமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இதேவேளை வவுனியாவில் வவுனியா மாவட்ட வெகுஜன அமைப்புக்களின் ஒன்றியம் ஏற்பாடு

(10ம் பக்கம்பார்க்க)

## சங்கரியின் அறிக்கைக்கு கடும் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண பொது நூலகத் திறப்பு விழா தொடர்பாக தமிழர் விடுதலைக் கூட்டணியின் சிரேஷ்ட தலைவரும் பாராளுமன்றஉறுப்பின ருமான வீ.ஆனந்தசங்கரி விடுத்த அறிக்கைக்கு யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் தனது வன்மையான கண்டனத்தை வெளி யிட்டுள்ளது.

(10ம் பக்கம் பார்க்க)

## பிரதமர் இந்தியா செல்வார்

(இலங்கை)

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கா எதிர்வரும் 27ம் திகதி இந்தியா விற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார். இந்தியாவில் நடைபெறவுள்ள ''நாளையஇந்தியா -2003''எனும் மாநாட்டில் கலந்து கொள்வதற் காகவே இவர் இந்தியா பயணமாக வுள்ளார்.

இம் மாநாட்டில் இந்திய குடிய ரசுத் தலைவர் அப்துல்கலாம், அமெ ரிக்காவின் முன்னாள் ஜனாதிபதி பில் கிளின்டன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

பிரதமர் இவ் விஜயத்தின்

(10ம் பக்கம் பார்க்க)

## மோதலை ஆரம்பித்தால் பதிலடி கொடுப்போம்

### வன்னிப் பிராந்தியத் தளபதி சுசில்

(வவுனியா)

இராணுவத்தினர் மீது எந்த ஒரு இயக்கமும் மோதலை ஆரம்பித் தால் அதனை பார்த்துக் கொண் டிருக்க முடியாது அதற்குப் பதிலடி கொடுக்கத் தயாராகவுள்ளதாக வன்னிப் பிராந்திய ஆயுதப்படை களின் தளபதி மேஜர் ஜெனரல் சுசில் சந்திரபால கடந்த வியாழக் கிழமை வவுனியா நகரசபை மண் டபத்தில் இடம் பெற்ற வர்த்தகர்க ளுடனான சந்திப்பில் தெரிவித்துள் ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்; உயர் பாதுகாப்பு வலயப் பகுதிகளில் 33 கிராமங்களில் மக் கள் மீளக் குடியமர அனுமதி வழங் கியதை அறிந்து விடுதலைப் புலி களின தலைவர் வே.பிரபாகரன் மகிழ் ச்சி தெரிவித்துள்ளார்.

இந்தச் சூழலில் அரசாங்கத்திற்கு எதிராக ஆர்ப்பாட்டங்கள் செய்வதாலும, ஊர்வலங்கள் நடத்துவதாலும் சமா தானத்தைப் பெற்றுக் கொள்ள முடியாது என்பதை அனைவரும் புரிந்து கொள்ள வேண்டும்.இததகைய நட வடிக்கைகளினால் சமாதான முயற்சி கள் பாதிப்படையும்.

இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகு தியில் பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிசெய்வதில் பொலிஸாரும் படையினரும் இணைந்து செயற் பட்டு வருகின்றனர் எனவும் தெரி வித்துள்ளார். (உ)

அன்பு வாசகர்களே!
நாளை உங்களின்
சங்கு நாதம்
விஷேட அரசியல் கட்டுரையுடன்
விலை:- 12/-

## அரச பகுப்பாய்வுத் திணைக்கள தீ விபத்துக்கு மின் ஒழுக்கே காரணம்

### கொழும்பு பிரதிப் பொலிஸ்மா அதிபர் தகவல்

(கொழும்பு)

அரச பகுப்பாய்வுத் திணைக்களத் தில் மின் ஒழுக்கு காரணமாக நேற்று முன் தினம் இரவு தீவிபத்து ஏற்பட்டது என கொழும்பு பிராந்தியப் பொலிஸ் மா அதிபர் போதிலியனகே தெரி வித்துள்ளார்.

இதேவேளை திணைக்களத்தின் களஞ்சியப் பகுதியில் ஏற்பட்ட இத் தீ விபத்தினால் பல முக்கிய வழக்குகள் தொடர்பான ஆவணங் கள் மற்றும்இரசாயனப் பகுப்பாய்வுப் பொருட்கள் வெடிமருந்துகள்,உப கரணங்கள் பகுப்பாய்வுத் தடயப் பொருட்கள் என்பன முற்றாக சேத மடைந்துள்ளன என அரச பகுப்பாய் வாளர் கே.சிவராஜா தெரிவித்துள் ளார்.

எனினும்,இத் தீ விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளைகுற்றப் புலனாய்வுப் பிரிவினர்தொடர்ந்தும் நடத்தி வருகின்றனர்.

பகுப்பாய்வுத் திணைக்களத்தில்

(10ம் பக்கம் பார்க்க)

## மானிப்பாய்ச் சம்பவம்

# யுத்த நிறுத்த மீறலென யாழ்.தளபதி கூறவில்லை!

### வலம்புரிச் செய்திக்கு படைத் தலைமையகம் மறுப்பு

(யாழ்ப்பாணம்)

கடந்த புதனன்று மானிப்பாய்ப் பகுதியில இடம் பெற்ற சம்பவம் குறித்து ''இராணுவம் யுத்த நிறுத்தத்தை மீறியுள்ளது கண்காணிப்புக்குழுத் தலைவர்-அறிவிப்பு-யாழ்இராணுவத் தளபதி சரத் பொன்சேகா ஒப்புக் கொண்டார்'' எனத் தலைப்பிட்டு கடந்த 13.02.2003 அன்றைய வலம் புரிப் பத்திரிகையின் முன் பக்கத்தில் வெளியான செய்தியை யாழ்.பாது காப்புத் தலைமையகம் மறுத்துள்ளது.

இது குறித்து மேஜர் பிஎ்ஏ.என்எஸ்கே. கருணாரத்தின அனுப்பி வைத்துள்ள பத்திரிகைக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டிருப்பதாவது;

இராணுவத்தினர் யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளனரென தங் களது பத்திரிகையில் செய்தி வெளி யிடப்பட்டுள்ளபோதிலும்,இராணுவத்தி னர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறவில்லைஎன்பதுடன் எல்.ரீ.ரீ.ஈ இயக்க உறுப்பினர்களுடன் பொது மக்கள் சேர்ந்து மானிப்பாய் முகாமைச் சுற்றிவளைத்து முகாமில் இருந்தவர் களுக்கு அச்சுறுத்தல் விடுத்த

(10ம் பக்கம் பார்க்க)

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்




# CRICKET WORLD CUP 2003




## உலகக் கிண்ணக் கிரிக்கெற் - 2003

### அவுஸ்திரேலியா எதிர் இந்தியா

#### இந்தியா

41.4 ஓவர்கள் முடிவில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 125 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| சி.கங்குலி | c கில்கிறிஸ்ற் | b பிரெட்லீ | 09 (21) |
| டெண்டுல்கர் | lbw | b கிலெஸ்பி | 36 (59) |
| சேவாக் | c கில்கிறிஸ்ற் | b பிரெட்லீ | 04 (04) |
| ராகுல்ராவிட் | b கிலெஸ்பி | | 01 (23) |
| யுவராஜ்சிங் | lbw | b மக்ராத் | 00 (08) |
| கைவ் | c ஸ்சிமொன்ட்ஸ் | b கிலெஸ்பி | 01 (16) |
| மொங்கியா | c சைமொன்ட்ஸ் | b பிரெட்லீ | 13 (39) |
| கும்ளே | Not out | | 16 (38) |
| ஹர்பஜன்சிங் | lbw | b பி.ஹக் | 28 (32) |
| சகீர்கான் | lbw | b லெக்மன் | 01 (09) |
| சிறிநாத் | Run out | | 00 (02) |

உதிரிகள் –16

#### பந்து வீச்சு -அவுஸ்திரேலியா

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| மக்ராத் | 08 | 23 | 1 |
| பிரெட்லீ | 09 | 36 | 3 |
| கிலெஸ்பி | 10 | 13 | 3 |
| சைமொன்ட்ஸ் | 06 | 25 | 0 |
| ஹக் | 4.4 | 16 | 1 |
| லெக்மன் | 4 | 07 | 1 |

#### அவுஸ்திரேலியா

22.2 ஓவர்கள் முடிவில் ஒரு விக்கெட் இழப்பிற்கு 128 ஓட்டங்கள்

| | | | |
|---|---|---|---|
| கில்கிறிஸ்ற் | St ராவிட் | b கும்ளே | 48 (61) |
| மத்யூஹேடன் | Not out | | 45 (49) |
| பொண்டிங் | Not out | | 24 (24) |

உதிரிகள் –11

#### பந்து வீச்சு - இந்தியா

| வீசியவர்கள் | ஓவர் | ஓட்டம் | விக்கெட் |
|---|---|---|---|
| சிறிநாத் | 04 | 26 | - |
| சகீர்கான் | 04 | 26 | - |
| ஹர்பஜன்சிங் | 7.2 | 49 | - |
| கும்ளே | 07 | 24 | 1 |

## இன்றைய ஆட்டங்கள்

**தென்னாபிரிக்கா எதிர் நியூசிலாந்து**
(ஜொஹனஸ்பார்க் மைதானம்)
2.00 P.M

**இங்கிலாந்து எதிர் நெதர்லாந்து**
(ஈஸ்ட்லண்டன் மைதானம்)
2.00 P.M

**பாகிஸ்தான் எதிர் நமீபியா**
(கிம்பர்லி மைதானம்)
2.00 P.M

## சிம்பாப்வே அணிக்கு இனாமாக நான்கு புள்ளிகள் கிடைத்தன

உலகக் கிண்ணக் கிரிக்கெற போட்டியின் ஏ குழுவில் பங்குபற றும் சிம்பாப்வே அணிக்கு நான்கு புள்ளிகள் இனாமாகக் கிடைத் துள்ளது.

ஹராரேயில் கடந்த வியாழக் கிழமை நடை பெறவிருந்த சிம் பாப்வேக்கு எதிரான போட்டியை தென்னாபிரிக்காவுக்கு மாற்றுமாறு இங்கிலாந்து அணி கோரியதை சர்வதேச கிரிக்கெற் பேரவை நிராகரித்ததன் காரணமாக இங்கிலாந்து அணி போட்டியில் பங்குபற்றவில்லை இதன் கார ணமாக சிம்பாப்வேக்கு 4புள்ளிகள் வழங்கப்பட் டுள்ளது.

இங்கிலாந்து அணி இத்தீர் மானத்தை எதிர்த்து மேன்முறை யீடு செய்யமுடியும் எனவும், எனி னும் இங்கிலாந்து கிரிக்கெட் சபை இந்த தீர்மானம் பற்றி மேன்முறையீடு செய்யமுடியும் எனவும் எனினும் இங்கிலாந்து கிரிக்கெட்சபை இத் தீர்மானம் பற்றி மேன்முறையீடு செய்யவிரும்பவில்லை என சபையின் பிரதம அதிகாரி ரிம்லெம் கூறியுள்ளார். வீரர் களின் பாதுகாப்புக் காரணமாக போட்டிகளை சிம்பாப்வேயில் இருந்து தென்னாபிரிக்காவிற்கு மாற்றுமாறு இங்கிலாந்து அணியினர் வேண்டுகோள் விடுத்தனர்.

இதனை நிராகரித்த உலகக் கிண்ணச் சுற்றுப் போட்டியின் தொழில்நுட்பக்குழு ஹராரேயில் வீரர்களுக்கு பாதுகாப்பு இருப்பதாகக் கூறியுள்ளது. இதேவேளை போட்டியில் விளையாடுவதா இல்லையா என்ற இறுதித் தீர்மானத்தை எடுக்க இங்கிலாந்து அணிக்கு சர்வதேச கிர்க்கெட் பேரவை அவகாசம் வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## எவ்வணிகள் சுப்பர் சிக்ஸ்"க்குள் நுழையும்?

உலகக் கிண்ணச் சற்றுப் போட்டியில் குழு B இல் ஆடிக் கொண்டிருக்கும் அணிகளில் எம் மூன்று அணிகள் சுப்பர்சிக்ஸ்"க்கு நுழையும்மென கூறமுடியாத தர்மசங்கட நிலை தோன்றியுள்ளது. இந்நிலையை நியூசிலாந்து அணி மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிரான ஆட்டத்தில் வென்றதன் மூலம் தோற்றுவித்துள்ளது. பலம் வாய்ந்த தென்னாபிரிக்க அணியை வென்ற மேற்கிந்தியத் தீவுகள் அணி நியூசிலந்து அணியிடம் தோல்வி கண்டுள்ளது.

தற்போதைய நிலையில் இலங்கை அணி இரு போட்டிகளில் விளையாடி அவற்றை வென்றுள்ளது. மற்றைய அணிகளான தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள், நியூசிலாந்து ஆகிய அணிகள் தலா இரு போட்டிகளில் விளையாடி ஒன்றை மட்டுமே வென்றுள்ளன. மூன்று அணிகளும் தலா நான்கு புள்ளிகளைப் பெற்று சம நிலையில் உள்ளன. இந் நிலையில எம் மூன்று அணிகள் சுப்பர் சிக்ஸ"க்கு தகுதி பெறுமென்று சங்கடமான நிலை தோன்றியுள்ளது.

இந்நிலையில் இனிமேல் நடைபெறவிருக்கும் சில போட்டிகள் முக்கியத்துவம் பெற்றுள்ளன. இவ்வகையில் இலங்கையை எதிர்த்து தென்னாபிரிக்கா ஆடப்போகும் ஆட்டமும், இலங்கையை எதிர்த்து மேற்கிந்தியத் தீவுகள் ஆடப்போகும் ஆட்டமும் தென்னாபிரிக்காவை எதிர்த்து நியூஸிலாந்து ஆடப்போகும் ஆட்டமும் மிகவும் முக்கியம் பெற்றுள்ளன. இப்போட்டிகளில் இலங்கை வெற்றி பெற்றால் எவ்வித தடங்கலுமின்றி அவ்வணி சுப்பர்சிக்ஸ்க்குள் நுழையும். இவ்வாறே இரு அணிகள் தலா இரு போட்டி களில் தோற்ற நிலையில் இருக்கப்போவது உறுதியாகி விட்டது. இந் நிலையில் இலங்கை அணி பங்களாதேஷ் அணியை வெற்றி கொண்ட நிலையில் கனடா அணி, கென்யா அணியை எதிர்த்து ஆடவுள்ளமை குறிப்பிடத் தக்கது.

(55)

## உலக கோப்பை கிரிக்கெட் - 2003


இ.ச.பேரம்பலம் சக நிறுவனத்துடன் இணைந்து

**வலம்புரி**

நடாத்தும் மாபெரும் கிரிக்கெற் பரிசுப்போட்டி

போட்டியில் பங்கு பற்றுங்கள் பெறுமதியான பரிசை வெற்றி கொள்ளுங்கள்

1) இம்முறை உலகக்கிண்ணத்தை வெல்லும் அணி எது?

2) இப் போட்டியின் சகலதுறை ஆட்டக்காரர் யார்?


உங்கள் விடைகளை அனுப்ப வேண்டிய முகவரி


கிரிக்கெற் பரிசுப் போட்டி

**வலம்புரி**

இல 15, வெள்ளாந்தெரு

யாழ்ப்பாணம்.



அவுஸ்ரேலிய அணியின் பந்து வீச்சில் ... ம ... அணி வீரர்கள்.


உங்கள் விடையுடன் தவறாது இக் கூப்பனை வெட்டி அனுப்புங்கள்

உலகக் கிண்ண கிரிக்கெற் போட்டி - 2003

முழுப்பெயர் : ..............................

முகவரி : ..............................

தே.அ.அ.இல : ..............................

கையொப்பம்: ..............................


அனுப்ப வேண்டிய முடிவுத்திகதி

மார்ச் 15, 2003

# இந்தியாவின் எதிர்காலம் குறித்த மாநாட்டில் ரணில்-பில் கிளிங்டன்

## பிரதமர் 27 இல் புதுடில்லி பயணம்


(கொழும்பு)



உலகநிலைப்பாட்டில் இந்தியாவின் எதிர்காலம் பற்றிய சர்வதேச மாநாடு ஒன்றில் கலந்து கொள்வதற்காக பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஐந்து நாள் விஜயமொன்றை மேற்கொண்டு இம்மாதம் 27 ஆம் திகதி புதுடில்லி செல்லவிருக்கிறார்.

'நாளைய இந்தியா-2003 உலகின் பூதாகர சக்தியா? அற்பனா?' என்ற தொனிப்பொருளிலான இந்த மாநாட்டை தென்கிழக்காசியாவின் மிகப் பிரபலம் வாய்ந்த சஞ்சிகையான இந்தியா டுடே ஏற்பாடு செய்துள்ளது.

பெப்ரவரி 28 தொடக்கம் மார்ச் 02 ஆம் திகதி வரை நடைபெறும் இந்த மாநாட்டில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்காவுடன் இந்திய ஜனாதிபதி ஏ.பி.ஜே.அப்துல் கலாம், முன்னாள் அமெரிக்க ஜனாதிபதி பில் கிளிங்டன், பத்திரிகை ஆசிரியரும் சர்வதேச



வர்த்தக முன்னோடியுமான ஜகதீஷ் பகவதி மற்றும் பல பிரமுகர்களும் பங்குபற்றவுள்ளனர். (உ)

# நாட்டு மக்களின் ஒத்துழைப்பின்றி இனப்பிரச்சினைக்குத் தீர்வில்லை

## சீனிவாசதேரர் வலியுறுத்தி உரை

(கொழும்பு)

இலங்கையின் நீண்ட காலப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்பட வேண்டுமானால் நாட்டின் அனைத் துப் பாகங்களிலும் வசிக்கும் பொது மக்களினது ஒத்துழைப்பு அவசியம் என்று அட்டமல்தான பல்லேகம சீனிவாச தேரர் தெரிவிததுள்ளார்.

இது விடயம் குறித்து மேலும் கருத்து தெரிவித்த தேரர்,

எந்தவொரு நாட்டிலும் யுத்தத்தின் மூலம் தீர்வு கண்டதாக வரலாறு இல்லை. எனவே, நாட்டின் இனப்பிரச்சினைக்கு தீர்வு காணப்பட வேண்டுமானால் சமாதானப் பேச்சுவார்த்தைகள் அவசியம்.

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்குமிடையில் நடைபெற்றுவரும் பேச்சுவார்த் தைகளில் முன்னேற்றங்கள் ஏற்பட்டு வருகின்றன.

இதனால் நாட்டிலுள்ள அனைத்து இன மக்களும் யுத்தப் பீதியின்றி அமைதியாகவும், ஒற்றுமையாகவும் வாழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான முயற்சிகளுக்கு அனைத்து இன மக்களின் ஒத்துழைப்பும் தேவை.

இருபது வருடங்களுக்கு மேலாக நீடித்த வியட்னாம் யுத்தத்தை வல்லரசு நாடான அமெரிக்காவினால் வெற்றி பெற முடியவில்லை என்று குறிப்பிட்ட தேரர்,

அபிவிருத்தியடைந்து வரும் நாடான இலங்கையில் எவ்வாறு யுத்தம் ஒன்றினால் வெற்றிபெற முடியும் எனவும் கேள்வி எழுப்பியுள்ளார். (உ-8)

# பத்திரிகையாளர் மீது தொடரும் தாக்குதல்களைக் கண்டித்து வாயைக்கட்டிப் போராட்டம்

## திங்களன்று நடத்த ஏற்பாடு

(திருநெல்வேலி)

தமிழ்ப் பத்திரிகையாளர்கள் மீதான தொடர் தாக்குதல்களை நிறுத்தி பாதிக்கப்பட்டோருக்கு நீதி வழங்குமாறு கோரி நாளை 17ஆம் திகதி திங்கட்கிழமை மு.ப 10 மணியளவில் யாழ்ப்பாணத்தில் உள்ள தகவல் திணைக்களம் முன்பாக அகிம்சை ரீதியில் வாய்களிற்கு கறுப்புத் துணி கட்டி கைகளையும் கறுப்புத் துணியால் கட்டி ஊடகத்துறை அமைச்சிற்கும் இராணுவத்தினருக்கும் எமது எதிர்ப்பை வெளிக்காட்டவுள்ளோம்.

யாழ்ப்பாண ஊடகவியலாளர்கள் சங்கம் ஊடகத்துறை அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்காருக்கு அனுப்பி வைத்துள்ள அவசர கடிதத்தில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் குறிப்பிடப் பட்டிருப்பதாவது,

ரணில் விக்கிரம சிங்கவின் ஆட்சியில் தமிழ் ஊடகவியலாளர்கள் மீதான தாக்குதல் நடவடிக்கைகள் தொடர்ந்த வண்ணம் உள்ளன.

நெல்லியடியில் தொடங்கி மட்டக்களப்பில் இருந்து தற்போது மீண்டும் மானிப்பாய் வரை இத்தாக்குதல் சம்பவங்கள் நீண்டு கொண்டே செல்கின்றன. தட்டிக்கேட்க யாரும் இல்லை என்ற துணிவில் இத்தாக்குதல்கள் தொடர்கின்றன.

தமிழ்ப் பத்திரிகை உலகம் குறிப்பாக யாழ்ப்பாணப் பத்திரிகை சமூகம் இவற்றுக்கு எதிராக அணி திரளவுள்ளது. இந்த நிலையில் அரசபடைகளின் பிரித்தாளும் தந்திரம் இனியும் இங்கு எடுபடாது என்பதைக் கூறி வைக்க விரும்புவதுடன் தமிழ்ப் பத்திரிகையாளர்கள் என்று பேதம் பாராமல் உங்களது ஆட்சிக்காலத்தில் பத்திரிகையாளர்கள் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவங்கள் தொடர்பாக பக்கச்சார்பற்ற விசாரணைகளை நடத்தி நீதி வழங்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்.

சிறிலங்கா அரசின் அமைச்சர்கள் குடாநாட்டிற்கு வரும் போது கறுப்பு உடையணிந்து எமது தொடர் எதிர்ப்பைக் காட்டவும் நாம் தீர்மானித்துள்ளோம் என்று குறிப்பிட்டுள்ளது. (உ)

## யாழ் - குருநாகல்

### பாடசாலை அணிகளிற்கிடையிலான கிரிக்கெற் போட்டி சமநிலையில் முடிவு

(மண்கும்பான்)

ஏறக்குறைய 13 ஆண்டுகளுக்குப் பின் யாழ். மாவட்ட பாடசாலை அணியொன்று அண்மையில் குருநாகல் மாவட்ட பாடசாலை அணியுடன் சிநேகபூர்வ ஆட்டமொன்றில் பங்கு பற்றியுள்ளது.

சமாதான நல்லெண்ண முயற்சியாக சென். பற்றிக்ஸ் கல்லூரியின் 19 வயதுக்குட்பட்ட கிரிக்கெட் அணி, குருநாகல் சென். ஆன்ஸ் கல்லூரி அணியின் 19 வயதுக்குட்பட்ட அணியை குருநாகல் சென் ஆன்ஸ் கல்லூரி மைதானத்தில் எதிர்த்தாடியது.

இவ்வாட்டத்தில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென் பற்றிக்ஸ் கல்லூரி அணி 1ஆவது இனிங்ஸில் 138 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய சென். ஆன்ஸ் கல்லூரி அணி 1-வது இனிங்ஸில் 90 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. 2 ஆவது இனிங்ஸில் சென். பற்றிக்ஸ் அணி 152 ஓட்டங்களைப் பெற்று 7 இலக்குகளை இழந்திருந்த வேளையில் ஆட்டத்தை இடை நிறுத்திக் கொண்டது.

பின் 2 ஆவது இனிங்ஸில் சென். ஆன்ஸ் அணி 8 இலக்குகளை இழந்து 121 ஓட்டங்களைப் பெற்றிருந்த வேளையில் போதிய வெளிச்சமின்மை காரணமாக ஆட்டம் சம நிலையில் முடிவுற்றது.

இந்த ஆட்டத்தில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி சார்பாக துடுப்பாட்டத்தில் ஆர்.விநோதன் 1ஆவது இனிங்ஸில் 48 ஓட்டங்களையும் அருண்நாத் 2 ஆவது இனிங்ஸில் 42 ஓட்டங்களையும் அணித் தலைவர் சி.ஆர்.எம்.கிறிஷாந்தன் 1 ஆவது இனிங்ஸில் 3 சிக்ஸர் அடங்கலாக 28 ஓட்டங்களையும் 2ஆவது இனிங்ஸில் 1 சிக்ஸர் அடங்கலாக 25 ஓட்டங்களையும் குவித்தனர்.

பந்து வீச்சில் ஜி.எஸ்.லொயிட் 1 ஆவது இனிங்ஸில் 7 இலக்குகளையும் இரண்டாவது இனிங்ஸில் 4 இலக்குகளையும் சாய்த்தார். களத் தடுப்பைப் பொறுத்தவரை சி.ஆர்.எம். றொஷாந்தன் அபாரமான பிடியொன்றை எடுத்தார். யாழ். வீரர்கள் ஏனைய மாவட்டத்தில் சென்று தமது திறமையை வெளிக்கொணர்ந்தமையை விளையாட்டு ஆர்வலர்கள் பலரும் பாராட்டியுள்ளனர். (உ-55)

# செய்தித்துளிகள்

### கடவுச்சீட்டு படிவங்கள்

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு கடவுச்சீட்டுத் தொடர்பான சகல படிவங்களும் கிடைக்கப்பெற்றுள்ளதால், தேவையானவர்கள் பணத்தைச் செலுத்தி அப்படிவங்களைப் பெற்றுக் கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-36)

### சனியன்று சமாதான ஊர்வலம்

(வவுனியா)

யுத்த நிறுத்த உடன்படிக்கையின் ஓராண்டுப் பூர்த்தியை முன்னிட்டு வவுனியா மாவட்டத்தில் எதிர்வரும் 22ஆம் திகதி சனிக்கிழமை காலை சமாதான ஊர்வலம் ஒன்று நடைபெறவுள்ளது.

வவுனியா மாவட்டச் செயலகத்தில் மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ் தலைமையில் நடத்தப்பட்ட உயர் மட்ட மாநாட்டில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இச்சமாதான ஊர்வலத்தில் மாவட்டத்தின் மதத் தலைவர்கள், பொதுமக்கள், அரச அலுவலர்கள் ஆகியோர் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-8)

### விளையாட்டுப் போட்டி

(கரவெட்டி)

யா/கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று ஞாயிற்றுக் கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

பாடசாலை அதிபர் வி.சிவசிதம்பரம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட தபால் அத்தியட்சகர் எஸ்.சிவராசசிங்கம் சிறப்பு விருந்தினராக யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.கே.சிவாஜிலிங்கமும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-44)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யா/உரும்பிராய் இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட் கிழமை பி.ப. 1.30 மணிக்கு கல்லூரி மைதானத்தில் முதல்வர் அ.ஈஸ்வரநாதன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவரும், பழைய மாணவருமான பொ.கனகசபாபதியும், சிறப்பு விருந்தினராக வலி. கிழக்கு பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் ச.வீரசிங்கமும், கௌரவ விருந்தினர்களாக கோப்பாய் கோட்டக் கல்வி அலுவலர் இ.சிவஞானசுந்தரம், தமிழீழ விடுதலைப் புலிகளின் வலி.கிழக்கு அரசியல் துறைப் பொறுப்பாளர் எஸ்.யாழவன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

* * * * * *

(யாழ்ப்பாணம்)

யா/கைதடி விக்னேஸ்வர வித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை திங்கட் கிழமை பி.ப. 2 மணிக்கு பாடசாலை மைதானத்தில் அதிபர் மா.து.பாலசுந்தரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில், பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அ.விநாயகமூர்த்தியும், சிறப்பு விருந்தினராக தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராஜாவும், கௌரவ விருந்தினராக சாவகச்சேரி கோட்டக் கல்வி அலுவலர் நா.சத்தியநாதனும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-10)

### தொழில்சார் உபகரணங்கள்

(கல்வயல்)

தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக் குடியமர்ந்த மக்களுக்கு பட்டினிக்கெதிரான நிறுவனம் தொழில்சார் உபகரணங்களை வழங்கி வருகின்றது. (உ-36)

### சைவ சமய அறிவுப்பரீட்சை

(யாழ்ப்பாணம்)

வண்ணை-சாந்தையர் மடம் ஸ்ரீ கற்பக விநாயகர் கோவிலில் சைவ சமய அபிவிருத்திக் கழகம் நடத்தும் சைவசமய அறிவுப் பரீட்சை இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி முதல் குடாநாட்டிலுள்ள 17 பரீட்சை நிலையங்களில் நடைபெறவுள்ளது.

தரம் 3 முதல் தரம் 13 வரையிலான வகுப்புக்களைச் சேர்ந்த மாணவர்களுக்காக நடத்தப்படும் இந்த எழுத்துப் பரீட்சையில் சுமார் 3 ஆயிரத்து500 மாணவர்கள் தோற்றவுள்ளனர்.

பரீட்சார்த்திகளுக்கான அனுமதி அட்டைகள் யாவும் தபால் மூலம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### மீனவர்களுக்கு தடை

(திருநெல்வேலி)

குடத்தனைப் பகுதியில் உள்ள நடுக் குடத்தனை என்னும் இடத்தைச் சேர்ந்த 30 கடற்றொழிலாளர்களை கடற்றொழிலில் ஈடுபட படைத்தரப்பு தடைவிதித் துள்ளது.

இத்தடை காரணமாக இவர்களது அன்றாட ஜீவனோபாயம் பெரும் கேள்விக்குறியாகியுள்ளது. (உ-43)

### தென்னங்கன்று விநியோகம

(கல்வயல்)

தென்மராட்சி பிரதேச செயலகத்திற்கு ஒரு தொகுதி தென்னங்கன்றுகள் வந்து சேர்ந்துள்ளன.

இவை தென்மராட்சி பிரதேச செயலக கிராம உத்தியோகத்தர் பிரிவுகளில் உள்ள தெரிவு செய்யப்பட்ட குடும்பங்களுக்கு அடுத்த வாரம் தொடக்கம் விநியோகிக்கப்படவுள்ளன. (உ-36)

### வீடியோ படக் காட்சி

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக புறநிலைப் படிப்புகள் அலகும் திரைப்பட வட்டமும் இணைந்து வழங்கிவரும் திரைப் படக் காட்சித் தொடரில் நாஞ்சில் நாடன் எழுதிய 'தலைகீழ் விகிதங்கள்' என்ற நாவலை மூலமாகக் கொண்டு தங்கர் பச்சான் இயக்கிய 'சொல்ல மறந்த கதை' இன்று மு.ப. 10.00 மணிக்கு புவியியற்றுறை மண்டபத்தில் காண்பிக்கப்படவுள்ளது.

ஆர்வலர்கள் எவரும் கலந்து கொண்டு பயன் பெறலாம் என புறநிலைப் படிப்புகள் அலகின் இணைப்பாளர் தெரிவித்துள்ளார். (உ)

### சிரமதானம்

(கரணவாய்)

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலை சுற்றுப்புறத்தில் அண்மையில் வைத்தியசாலைப் பணியாளர்கள் சிரமதானப் பணியில் ஈடுபட்டனர்.

இதேவேளை, மேற்படி வைத்தியசாலை வளவில் சுதந்திர தினத்தையொட்டி பருத்தித்துறை, நெல்லியடிப் பொலிஸார் சிரமதானம் மேற்கொண்டமை குறிப்பிடத்தக்கது. (உ-29)

### கைநூல் வந்து சேர்ந்தது

(கல்வியங்காடு)

இலங்கை திறந்த பல்கலைக் கழகத்தின் யாழ். பிராந்திய நிலையத்தில் பட்ட மேற்கல்வி டிப்ளோமாவுக்கு விண்ணப்பித்தவர்களுக்கான கைநூல் வந்திருப்பதாகவும், உரியவர்கள் அதனை வந்து பெற்றுக்கொள்ளுமாறும் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-54)

### அலுவலகம் திறப்பு

(நெல்லியடி)

யாழ்.வர்த்தகர் தொழிலாளர் கூட்டுறவுச் சங்கக் கிளை அலுவலகம் அண்மையில் வல்வெட்டித்துறையில் திறந்து வைக்கப்பட்டது. (உ-44)

## இன்று ஒரு தகவல்

# சிறை வாழ்வு சீர் திருத்துமா?

ஒருவன் "நான் எங்கள் அப்பாவை விட்டு எப்பொழுதும் பிரிவது இல்லை. அவர் எங்கே போயிருக்கிறாரோ அங்கே தான் நானும் இருப்பேன்" என்றான். உங்கள் அப்பா எங்கே இருக்கிறார் என்று கேட்டால் அவர் சிறையில் (ஜெயிலில்) இருக்கிறார் என்கின்றான். ஜெயிலுக்குப் போனாலும் சேர்ந்தே போய்விட்டு வருகிற அளவுக்கு அப்படி ஒரு பந்தம். அது இருக்கட்டும். இந்தக் காலத்தில் இவர்கள் எல்லோரும் சிறைக்குப் போவதென்றால் ஏதோ மாமியார் வீட்டுக்குப் போய்விட்டு வருகிற மாதிரிப் போய்விட்டு வருகிறார்கள். ஆனால் அந்தக் காலத்தில் இப்படி முடியாது. ஒரு காலத்தில் சிறைக்குப் போவதென்றால் பயந்து நடுங்கினார்கள்.

1403 இல் இங்கிலாந்தில் சிறைச்சாலை ஏற்படுத்தப்பட்டு அது அரசாங்கத்தின் நேரடி நிர்வாகத்தில் இருந்தது. ஆனால் அதற்கு முன் சங்ககாலத்தில் தமிழ் நாட்டில் சிறைகள் இருந்திருக்கின்றன. அது பற்றிய குறிப்புக்களும் இருக்கின்றன. கணைக்கால் இரும்பொறை சிறையிலேயிருந்து தண்ணீர் கேட்டு அது கொடுக்கப்படாததனால் அவமானம் தாங்காமல் ஒரு பாடல் எழுதி (புறம்74) இறந்ததாகக் குறிப்பு உண்டு. "குணவாயில் கோட்டத்துச் சிறை வைத்தான்" என்று சொல்லுவார்கள். அந்த வாயிற் கோட்டம் கும்ப கோணமாக இருக்க வேண்டும் அல்லது திருச்சி மலைக் கோட்டையாக இருக்கலாம் என்று சொல்கிறார்கள். சிறைச்சாலைகளில் குற்றவாளிகளை மிகவும் கஷ்டப்படுத்துவார்கள் அதனால் சிறைக்குப் போவதென்றால் எல்லாருக்கும் பயம்.

இந்தப் பயம் இருந்தாற்றான் மனிதன் தப்புப் பண்ண மாட்டான் என்றுநினைத்தார்கள். ஆனால் காலப்போக்கில் கணக்குப் பார்த்தால்... இதனால் குற்றங்கள் குறைவதாகத் தெரியவில்லை. அதனால் பெரிய குற்றத்திற்கு மரணதண்டனை என்று கொண்டு வந்தார்கள். 1550 ஆம் ஆண்டிற்குப் பிறகு இங்கிலாந்திலும், இன்னும் சில ஐரோப்பிய நாடுகளிலும் சிறைச்சாலைகளை நிறுவினார்கள். அவற்றிற்கு வேலை வீடுகள், சீர்திருத்தமனைகள் என்பன பெயர்கள்.

பிச்சைக்காரர்கள்-கடன்காரர்கள்-குடும்பத்தைத் தவிக்க விட்டு விட்டு ஓடியவர்கள்- சும்மா திரிகிறவர்கள் போன்றவர்களை இங்கு பிடித்துக் கொண்டு வந்து அடைத்து வைப்பது வழக்கம். ஆனால் பெரிய குற்றம் செய்பவர்களுக்கு இது சரியான இடமில்லை. அதனால் அவர்களுக்காக அதிக பாதுகாப்போடு இருக்கிற மாதிரி சிறைகள் கட்டினார்கள். இருந்தாலும் எல்லாவிதமான குற்றவாளிகளையும் ஒரே அறையில் போட்டு அடைத்து வைத்தார்கள். அவர்களுக்கு ஒரு வேலையும் கிடையாது. சரியான சாப்பாடும் கிடையாது... சும்மா ஆடு, மாடு மாதிரி அடைந்து கிடந்தார்கள்.

18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் தான் கைதிகள் எல்லோரும் நல்ல முறையில் நடத்தப்பட வேண்டும். சிறைகள் சுத்தமாகவும், சுகாதாரமாகவும் இருக்க வேண்டும் என்கின்ற கூக்குரல் எழுந்தது. அதன் பின் காலப்போக்கில் பலவிதமான சீர்திருத்தங்கள் எல்லாம் செய்ய ஆரம்பித்தார்கள்.

இப்போது நிலைமை மிகவும் மாறிப்போயுள்ளது. சிறையில் கைதிகள் சும்மா இருக்க வேண்டியதில்லை. அவர்களுக்கு வேலை கொடுக்கிறார்கள். படிக்கலாம். தொழிற்கல்வி கற்றுக் கொள்ளலாம். வைத்திய வசதி, பொழுது போக்கு வசதியெல்லாம் இருக்கின்றன. சிறைச்சாலைகளை மேலும் சீர்திருத்தவேண்டுமென்று எவ்வளவோ யோசனைகள் எல்லாம் செய்து, செய்து கொண்டிருக்கிறார்கள். சிறைக்குப் போகிறவர்கள் மனிதாபிமான அடிப்படையில் சீர்திருத்த வேண்டும் என்பதற்காகத்தான் இவைகள் எல்லாம்.

வெகு காலத்துக்கு முன்பு குற்றவாளிகளைப் பிடித்து சிறையில் அடைத்து விடுவார்கள். வழக்கு விசாரணைக்கு வரும் வரையும் அவர்கள் அங்கே தான் இருக்க வேண்டும். விசாரித்துத் தீர்ப்பு வழங்கப்பட்டு விட்டால் உடனே தண்டனையை நிறைவேற்றி விடுவார்கள். வைத்துக்கொண்டிருப்பதில்லை. தண்டனையென்றால் மரண தண்டனை, இல்லையென்றால் கசையடி-சித்திரவதை, அபராதம் இப்படி ஏதாவது இருக்கலாம். தண்டனைக்காக சிறையில் அடைத்து வைக்கின்ற வழக்கம் அப்போது கிடையாது.

இராஜா, இராணி காலத்தில் ஓர் இராணியை ஒருவன் கடத்திக் கொண்டு போய் விட்டான் சார்! உடனே இராசாவிடம் எல்லோரும் ஓடி வந்து இந்த விஷயத்தைச் சொன்னார்கள். கடத்திக் கொண்டு போனவன் எங்கேயிருந்தாலும் உடனே கண்டு பிடித்து என் முன்னால் கொண்டு வந்து நிறுத்துங்கள் என்று உத்தரவு போட்டார் ராஜா. அவனை என்ன செய்யப் போகிறீர்கள் என்று கேட்டார் அமைச்சர். அவனுக்கு என்னுடைய பாராட்டையும் நன்றியையும் தெரிவிக்கப் போகின்றேன் என்றார் இராஜா.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# உப தபாலகத்தில் தராசு இல்லை

(நெடுந்தீவு)

நெடுந்தீவு மேற்குப் பிரதேசத்தில் இயங்கி வரும் உபதபாலகத்தில் நீண்ட காலமாக தராசு இல்லாமையால் கடிதங்கள், பொதிகளின் சரியான நிறைகளை அறிந்து மேலதிக முத்திரைக் கட்டணங்களைச் செலுத்துவதில் மக்கள் பெரும் சிரமப்படுகின்றனர்.

நெடுந்தீவு மேற்குப் பகுதியில் வாழும் சுமார் மூவாயிரத்துக்கும் மேற்பட்ட மக்களின் அன்றாட தபாலக சேவைகளை இவ் உபதபாலகம் வழங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (உ-48)

# இளைஞர் படையணியில் முஸ்லிம்களுக்கு முன்னுரிமை

## பிரதமரைக் கோருகிறார் பதியுதீன் எம்.பி

(புத்தளம்)

இளைஞர் படையணிக்கு ஆட்களைச் சேர்த்துக் கொள்ளும் போது வடமாகாணத்திலிருந்து இடம்பெயர்ந்து வெளிமாவட்டங்களில் குடியமர்ந்துள்ள முஸ்லிம் இளைஞர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிடம் வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரிசாத் பதியுதீன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவை அலரி மாளிகையில் அண்மையில் சந்தித்துப் பேசிய போதே மேற்கண்டவாறு வேண்டுகோள் விடுத்துள்ளார்.

வடமாகாணத்தில் இருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்கள் அகதி முகாம்களில் பெரும் சிரமங்களை அனுபவித்துவருகிறார்கள்.

ஒரு தேர்தல் தொகுதிக்கு 250 இளைஞர்கள், இளைஞர் படையணியில் சேர்க்கப்படவுள்ளனர்.

இந்நிலையில், புத்தளம், அனுராதபுரம், குருநாகல் ஆகிய மாவட்டங்களில் வாழுகின்ற வடமாகாண முஸ்லிம் இளைஞர்கள் விசேட நடைமுறை ஒன்றின் மூலம் சேர்க்கப்பட வேண்டும் என பதியுதீன் மேலும் கேட்டுள்ளார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, இளைஞர் படையணிக்கு ஆட்களைச் சேர்க்கும் போது இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று உறுதியளித்தார்.

பிரதமருடனான இச்சந்திப்பின் போது ஆசிரிய நியமனம், மீள்குடியேற்றம் மற்றும் பாதுகாப்புக்கள் குறித்தும் ஆராயப்பட்டது. (ம)

# ஈராக்கிற்கு எதிரான யுத்த ஏற்பாடுகளை கண்டிக்கிறது ஜே.வி.பி

## அமெரிக்காவிற்கு மகஜர்

(கொழும்பு)

அமெரிக்க ஜனாதிபதி ஈராக்கிற்கெதிராக நடத்துவதற்கு மேற்கொண்டு வரும் யுத்த ஏற்பாடுகளை இலங்கை கண்டிக்கிறது. உலக அபிப்பிராயத்திற்கெதிராக முன்னெடுக்கப்படும் இந்த முயற்சி நிறுத்தப்படல் வேண்டும் என்று கோரும் மகஜர் ஒன்றை கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு ஜே.வி.பி அனுப்பிவைத்துள்ளது.

ஒவ்வோர் நாட்டினதும் பெரும்பான்மை மக்களின் விருப்பப்படியான அரசாங்கங்கள் இருக்க வேண்டுமேயன்றி, அமெரிக்கத் தலைவர்களுடன் இசைந்து போகும் அரசாங்கங்களல்ல. எனவே அந்தந்த நாடுகளே அந்தந்த நாட்டுத் தலைவர்கள் யாரெனத் தீர்மானித்தல் வேண்டும்.

2001 செப்ரெம்பர் 11ஆம் திகதிய பயங்கரவாதத் தாக்குதல்களை இலங்கை கண்டித்திருந்தது. ஆனால், அச்சம்பவத்தின் பின்னைய நிகழ்வுகளை அமெரிக்கத் தலைமை வேறு விதத்தில் அர்த்தப்படுத்தி, வேறு நாடுகளை ஆக்கிரமிப்பதற்கு பயன்படுத்த முனைகிறது. இது ஏற்றுக் கொள்ளப்பட முடியாதது.

ஈரான், ஈராக், வடகொரியா ஆகிய நாடுகளின் தலைமைகளில் மாற்றங்கள் ஏற்படுத்துவதற்கு வசதியாக ஈவிரக்கமற்ற அழிவுகளை ஏற்படுத்தும் யுத்தமுறைகளை கையாளுவது பயங்கரவாதத்திற்கு எதிரான நடவடிக்கைகளுக்கு எதிரானதாகும்.

இதனால், உலக அபிப்பிராயங்களுக்கு எதிராக முன்னெடுக்கப்படும் ஈராக்கிற்கு எதிரான யுத்தம் உடனடியாக கைவிடப்பட வேண்டும் என்று ஜே.வி.பி அந்த மகஜரில் கேட்டுக் கொண்டுள்ளது. (உ)

## இராசி பலன்

**16. 02. 2003**

(மாசி 4, ஞாயிறு)

| | |
|---|---|
| சதுர்த்தசி | காலை 7.30வரை |
| பூரணை | காலை 6.16வரை |
| ஆயிலியம் | மு.இ 11.11 வரை |
| இராகுகாலம் | 5.03-6.33 |
| சுபநேரம் | 9.33 - 11.03 |

பூரணை விரதம்

**மேடம்**
ரோகவிருத்தி, சத்துருபயம், மனைவாசம், முயற்சி தாமதம்.

**இடபம்**
சகோதரர்உதவி, பிரயாண நன்மை, காரிய ஜெயம், வாக்கு மேன்மை.

**மிதுனம்**
ஸ்திரீ வியாதி, மாதர்நட்பு, விவாதம், முயற்சி தாமதம்.

**கடகம்**
தேக ஆரோக்கியம், பெரியோர் சந்திப்பு, போசன நன்மை, காரிய சித்தி.

**சிங்கம்**
சயன சுகக்குறைவு, காரிய அலைச்சல், உறவினர் மனஸ்தாபம், திடீர்பயணம்

**கன்னி**
சந்தோசமான சம்பவம், இஸ்ட சித்தி, பொருள் சேர்க்கை, தொழில் நன்மை.

**துலாம்**
செய்தொழில் விருத்தி, உறவினர் உதவி, தடைப்பட்ட காரியம் கைகூடும், திடீர் மாற்றம்.

**விருச்சிகம்**
தேகசுகம் பாதிப்பு, போசனசுகம், கட்டுப்பாடு, புதியசிந்தை.

**தனுசு**
முயற்சி தடங்கல், மனஸ்தாபம், தேக நலன் பாதிப்பு, போசனசுகம்.

**மகரம்**
நினைத்தகாரியம் கைகூடும், களஸ்திரசுகம், பிரயாண நன்மை, தெய்வ சிந்தை.

**கும்பம்**
சத்துருஜெயம், நோய்குணமடைதல், புதியதிட்டமிடல், காரிய அனுகூலம்.

**மீனம்**
சொத்துக்களால் மனஸ்தாபம், உடல்நலக் குறைவு, முயற்சி தாமதம், மாதாசுகம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- வளவன்.

## உணவுப்பண்டங்களுடன்

# பிளாஸ்ரிக் பொருட்கள் இணைத்து விற்கத் தடை

(கொழும்பு)

சிறுவர்களுக்கான சிற்றுண்டி உணவு வகைகளைத் தயாரிக்கும் நிறுவனங்கள் அவற்றுடன் பிளாஸ்ரிக் விளையாட்டுப் பொருட்களை இணைக்கக் கூடாதென சுகாதார அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

இத்தகைய சிற்றுண்டி வகைகளுடன் பிளாஸ்ரிக் விளையாட்டு உபகரணங்கள் கொண்ட உணவு வகைகளை இறக்குமதி செய்ய அனுமதி வழங்க வேண்டாம் என உணவுப்பாதுகாப்புக் குழுவுக்கும் பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

விளையாட்டு உபகரணங்களை உணவுப்பண்டங்களுடன் இணைத்து தமது விற்பனையை அதிகரிக்க உற்பத்தியாளர்கள் முன்வருவதால் சிறுவர்களுக்கு பாரிய எதிர் விளைவுகள் ஏற்படுகின்றன எனவும் அமைச்சு சுட்டிக்காட்டியுள்ளது. (உ-8)

# நோர்வே - இலங்கை அதிகாரிகள் சந்திப்பு

(கொழும்பு)

பொருளாதார அபிவிருத்தி தொடர்பாக நோர்வே மற்றும்இலங்கை உயர்மட்ட அதிகாரிகள் நாளை கொழும்பில் சந்தித்துப் பேசவுள்ளனர்.

இவ் உயர்மட்டச் சந்திப்பில் அமைச்சர் மிலிந்த மொறகொட, நோர்வே தூதுவர் ஜோன் வெஸ்பேர்க், திறைசேரி செயலாளர் சரித்த ரத்வத ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-3)

## நேரடி மினிபஸ் சேவை

(காரைநகர்)

காரைநகரில்இருந்து முகமாலைக்கான நேரடி மினிபஸ்சேவை ஒன்றினை நடத்துமாறு காரைநகர் தனியார் மினிபஸ்சங்கத்தலைவரிடம்காரைநகர் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (உ-246)

# மகளிர் உபகுழுவின் முதலாவது கூட்டம்

(கொழும்பு)

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட மகளிர் மற்றும் சிறுவர் நலன்கள் தொடர்பான குழு தனது முதலாவது சந்திப்பை எதிர்வரும் 20 ஆம் திகதி கிளிநொச்சியில் நடத்தவுள்ளது.

இக்குழுவில் ஏழு அரசப் பிரதிநிதிகளும், ஏழு தமிழீழ விடுதலைப்புலிகளின் பிரதிநிதிகளும் பங்குபற்றவுள்ளனர்.

அரச தரப்பில் அரசியல் விஞ்ஞானத்துறை பேராசிரியை குமாரி ஜயவர்த்தன, கொழும்பு பல்கலைக் கழக விரிவுரையாளர் மாலனி சாமுவேல் எதகம, காலநிதி தீபிகா உடுகம ஆகியோர் உள்ளடக்கப்படுகின்றனர்.

இச்சந்திப்பில் குழுவின் எதிர்கால செயற்பாடுகள் தொடர்பாகவும், வடக்கு-கிழக்கு யுத்த அனர்த்தங்களில் பாதிக்கப்பட்ட பெண்கள், சிறுவர் நலன்கள் தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளது. (உ-3)

# கறுப்புப் பணத்தை வெளிப்படுத்த சந்தர்ப்பம்

(கொழும்பு)

எதிர்வரும் வாரத்தில் வருமான வரி (விசேட ஏற்பாடுகள்) சட்ட மூலம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதும் கறுப்பணம் வைத்திருப்பவர்கள் அதனை வெளிப்படுத்தி முதலீடுசெய்துகொள்ளலாம்.

நேரடியான மற்றும் மறைமுக வரிசெலுத்தவேண்டியவர்களுக்கு இந்த வசதி பொருந்தும் என்று பிரதி நிதியமைச்சர் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார்.

இவர்கள் தமது பிரகடனத்தை யூன் 30 ஆம் திகதிக்கு முன்னர் செய்ய வேண்டும். இவ்வாறு பிரகடனப்படுத்தும் பட்சத்தில் இவர்களிடமுள்ள பிரகடனப்படுத்தப்படாத பணம் தொடர்பான விசாரணைகள் கைவிடப்படும் என்றும் பந்துல குணவர்த்தன தெரிவித்துள்ளார். (உ)

# பன்றி வேட்டைக்கு எந்தத் தடையுமில்லை

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் பன்றிகளை வேட்டையாடுவதை உடன் நிறுத்துமாறு மட்டக்களப்பு, அம்பாறை மாவட்ட விடுதலைப் புலிகளின் வனவளப்பகுதி பொறுப்பாளர் தர்மா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

எதிர்வரும் மே மாதம் 30ஆம் திகதி வரை இத்தடை உத்தரவுபிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் இக்காலப் பகுதியில் மான், மரை விலங்குகள் இன விருத்திக்காலமாகையால் வேட்டையாடுவதை நிறுத்துமாறும் வனவளப்பகுதியினரால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, காட்டுப்பன்றிகளை வேட்டையாடுவதற்கு எந்த தடைகளும் இல்லையெனவும் விடுதலைப் புலிகளின் வனவளப் பிரிவினால் அறிவிக்கப்பட்டுள்ளது. (உ)

# லயன் கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

லயன் கழக 306 'பி' பிராந்திய கருத்தரங்கு ஒன்று இன்று யாழ். மத்தியகல்லூரியில் மு.ப 10 மணிக்கு நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக மாவட்ட லயன்கவர்னர் ஓரெகன் பிஞ்ச் கலந்து கொள்ளவுள்ளார்.

கௌரவவிருந்தினராக முன்னாள் மாவட்ட கவர்னர் கே. தில்லைநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

லயன் ஊடக அமைதியும் சௌஜன்யமும் என்பது கருத்தரங்கின் தொனிப் பொருளாக அமையும். (பி)

# பொதுக் கூட்டம்

(காரைநகர்)

காரைநகர் மணிவாசகர் சபையின் அறுபத்துமூன்றாவது ஆண்டு பொதுக்கூட்டம் இன்று ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணிக்கு சபைத் தலைவர் பண்டிதர் மு.சு. வேலாயுத பிள்ளை தலைமையில் காரைநகர் சுப்பிரமணிய வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (உ-246)

# மின் விநியோக நேரம் போதாது

(காரைநகர்)

காரைநகருக்கான மின் விநியோக நேரத்தினை அதிகரிக்குமாறு பாவனையாளர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இப்பகுதிக்கு நேரம் மட்டுப்படுத்தப்பட்ட மின்சாரம் வழங்கப்படுவதால் பாவனையாளர்கள் அதன் பயனை முழுமையாக அடையமுடியாதிருப்பதாகவும் பாவனையாளர்கள் மின்சார சபையிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (உ-246)

# அதிபர் பதவிக்கு விண்ணப்பிக்கலாம்

(யாழ்ப்பாணம்)

யா/வண்ணை வைத்திலிங்க வித்தியாலய அதிபர் ஓய்வு பெறவுள்ளமையினால் குறித்த பாடசாலைக்கு இலங்கை அதிபர் சேவையினைச் சேர்ந்தோரிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விருப்பமும் தகைமையும் உடையோர் தமது சுயவிபரம் அடங்கிய விண்ணப்பத்தினை 2003.03.01 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக யாழ்ப்பாண வலயக் கல்வி அலுவலகத்திற்கு அனுப்பி வைக்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (உ)

# யா/ கல்வியியல் கல்லூரியில் கோயில்

(இருபாலை)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியில் ஆசிரிய மாணவர்களின் வழிபாட்டிற்கு வசதியாக கல்லூரி வளாகத்தில் பிள்ளையார் கோவில் கட்டுமானம் விரைவில் ஆரம்பமாகவுள்ளது. (உ-11)

# திருமுறை விழா

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் கோவில் பற்று இந்து சமய விருத்திச் சங்கத்தின் திருமுறை விழா இன்று மு.ப 9 மணிக்கு மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அன்னதான மண்டபத்தில் மேற்படி சங்கத்தின் தலைவர் செல்வி இ. சுப்பையா பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

நிகழ்வில் பிரதம விருந்தினர்களாக யாழ். பல்கலைக்கழக தமிழ்த் துறைத் தலைவர் அ. சண்முகதாஸ் மற்றும் கலாநிதி மனோன்மனி சண்முகதாஸ் ஆகியோரும், சிறப்பு விருந்தினர்களாக ஆசிரியமணி அ. பஞ்சாட்சரம், செஞ்சொற் செல்வர் ஆறுதிருமுருகன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர்.

இந்நிகழ்வில் ஆசியுரையினை மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய பிரதம குரு சிவஸ்ரீ பரமேஸ்வர ஜெயக்குமார குருக்களும் வாழ்த்துரையினை சமூகஜோதி கணேசதாஸனும் நிகழ்த்தவுள்ளனர். (உ-10)


## இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசை விழா 2003

இடம் : மன்றக் கலாமண்டபம்
காலம் : 14.02.2003 - 23.02.2003 வரை

நிகழ்ச்சி நிரல

இன்று (16.02.2003) ஞாயிற்றுக்கிழமை (3ம் நாள்)

ஸ்ரீ திருப்பதி P.V.T LTD., இல: 130, 4ஆம் குறுக்குத் தெரு, கொழும்பு – 11 ஆதரவில்
சற்குரு ஸ்ரீ தியாகராஜ சுவாமிகள் ஆராதனை விழா
மங்கள விளக்கேற்றல் : திரு. எஸ். குகதாஸ (திருப்பதி ஸ்ரோஸ்)

காலை 9.00 மணி முதல் 10.00 மணி வரை
பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்
ஈழத்து முதுபெரும் கலைஞர்களும், இளங்கலைஞர்களும் இணைந்து வழங்குகின்றார்கள்.

காலை 10.00 மணி முதல் 11.30 மணி வரை
ஈழத்து முதுபெரும் நாதஸ்வரக் கலைஞர்களும் தவில் வித்துவான்களும் இணைந்து வழங்கும்
நாதாஞ்சலி (பஞ்சரத்தினக் கீர்த்தனைகள்)

காலை 11.30 மணி முதல் 12.45 மணி வரை
பாட்டு : எஸ். கணபதிப்பிள்ளை — வயலின் : எஸ். கோபிதாஸ்
மிருதங்கம் : எம். சிதம்பரநாதன்

காலை 12.15 மணி முதல் 1.00 மணி வரை
பாட்டு : சியாமளாங்கி கருணாகரன் — வயலின் : ரோகினிவதனி அருளையா
மிருதங்கம் வி. றமணன்

மதியபோசனம் (கொழும்பு ஸ்ரீ திருப்பதி P.V.T LTD)

மாலை நிகழ்ச்சிகள்

மாலை 3.00 மணி முதல் 4.00 மணி வரை
நாதாஞ்சலி

| நாதஸ்வரம் | தவில் |
|---|---|
| என். சிவசுப்பிரமணியம் | எம். முருகதாஸ் |
| எஸ். செல்வகுமார் | எம். தயானந்தன் |

மாலை 4.00 மணி முதல் 4.45 மணி வரை
பாட்டு : மகேஸ்வரிசுப்பிரமணியம் — வயலின் : கே. வனஜா
மிருதங்கம் : எஸ். துரைராசா

மாலை 4.45 மணி முதல் 5.30 மணி வரை
புல்லாங்குழல் : ஆர். வசந்தன் — வயலின் : ஏ. ஜெயராமன்
வீணை : எம்.எஸ். சுந்தர் — மிருதங்கம் : கே. கஜன்

மாலை 5.30 மணி முதல் 6.15 மணி வரை
பாட்டு : திருமதி. ஞானகுமாரி சிவநேசன் — வயலின் : செல்வி. பாக்கியலட்சுமி நடராசா
மிருதங்கம் : எம். சிதம்பரநாதன்

மாலை 6.15 மணி முதல் 7.00 மணி வரை
பாட்டு : பங்கயற்செல்வி முகுந்தன் — வயலின் : சந்தானலட்சுமி அப்புத்துரை
மிருதங்கம் : கானகோகிலம் ஜெயம்

இரவு 7.00 மணி முதல் 8.00 மணி வரை
பாட்டு : என்.வி.எம். நவரத்தினம் — வயலின் : ஆர். இராதாகிருஷ்ணன்
மிருதங்கம் : எம். சிதம்பரநாதன் — கெஞ்சிரா : கே. அனந்தகோபன்
முகர்சிங் : வி. றமணன்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

சட்டநாதர் வீதி நல்லூர். (C/5761) மன்றத்தினர்



உ

"இன்னுயிர் நீர்ப்பினும் நந்தமிழ் காப்போம்"

## சக்தி பண்ணிசை மன்றம்

- அரியாலை-

## தமிழ் விழா - 2003

காலம் : 2003-02 -16 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00மணி
இடம் : அரியாலை ஸ்ரீ அண்ணமார் ஆலய முன்றல்
தலைவர் : திரு. பொன்னையா நடராசா
(அதிபர், அரியாலை ஸ்ரீ பார்வதி வித்தியாசாலை)
பிரதம விருந்தினர் : பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(தலைவர், தமிழ்த்துறை யாழ். பல்கலைக்கழகம்)
சிறப்பு விருந்தினர்கள் : திரு. ஈஸ்வரன்
(பொறுப்பாளர் நல்லூர் கோட்டம் த.வி.புலிகள்)
திரு. செல்லன் கந்தையன்
(முதல்வர் யாழ். மாநகரசபை)

கௌரவ விருந்தினர்கள் :
1. பிரதேச செயலர், நல்லூர்
2. கலாசார உத்தியோகத்தர், நல்லூர் பிரதேச செயலர் பிரிவு.
3. திரு. த. பஞ்சலிங்கம் (அகில இலங்கை ஆசிரியர் சங்கம)
4. திரு. சிவக்கொழுந்து யோகநாதன (தருமபுரம்)
5. பொது முகாமையாளர் (ப.தெ.வ.அ.கூ.சங்கம் – அரியாலை)
6. திரு. வி.மாணிக்கம் (அதிபர் யா/கனகரட்னம் ம.ம.வி)

### நிகழ்ச்சி நிரல்

தமிழ்த்தாய், தமிழ் அறிஞர்களின் ஊர்வலம்
ஆரம்பம் - யா/அரியாலை சரஸ்வதி அம்பாள் ஆலயத்திலிருந்து
மங்கள விளக்கேற்றல்
கொடியேற்றல்
இறை வணக்கம் ~ சிவாநந்தன் விஜசன்
அக வணக்கம்
தமிழ்த்தாய் வாழ்த்து ~ சிவாநந்தன், தர்ஷா, வரதராசா, தேனுகா
மங்கள இசை
வரவேற்புரை : திருமதி செல்வநாதன் சாந்தி
ஆசியுரை : பிரம்ம ஸ்ரீ சிவகுமார சர்மா
தலைமையுரை
பிரதம விருந்தினர் உரை
பாமாலை வழங்குபவர் : பாவாணர் ச.பஞ்சாட்சரம்
குழுப்பாடல் : சக்தி பண்ணிசை மன்ற மாணவர்
பண்ணிசை : முத்தமிழ் வேந்தர் நாக. பரமசாமி
நடனம் : ஆசிரியை தவம் - ஜெயந்தினி அவர்களின மாணவிகள்

### கவியரங்கம்

"நாமிருக்கும் நாடு நமதென்பதறிவோம்"
தலைவர் :கவிமாமணி, மதுரகவி காரை.
எம்.பி. அருளானந்தன
(ஆசிரியர்,ஸ்ரான்லிக் கல்லூரி, யாழ்ப்பாணம்)
(அமைப்பாளர், ஈழத்தமிழர் சைவத்தமிழ் பண்பாட்டுக்கழகம்)

பங்கேற்போர் :
* கிராமத்துக்குயில் ஓவியா றெஜிபன்
* அருண்மொழிச் செல்வன் க. ஜெசீதன்
* கவிக்குயில் த. தர்மினி
* கவிக்குயில் எஸ். நந்தினி
* கவிஞர் கு. புரந்தரன்
* கவிஞர் எஸ். செல்வானந்தன்
* தெய்வத்தமிழ் செம்மல் நவநீதன்

அறிஞர், கலைஞர் கௌரவிப்பு நிகழ்வு
பட்டி மண்டபம்:
"ஈழத்தமிழரின் பண்பாட்டு விழுமியங்களைப் பேணிக் காப்பதில் பெரும்பங்கு வகிப்பவர்கள் ஆண்களா? பெண்களா?"
"மாவை சிவநாதம் பட்டிமன்றக் குழு"
நடுவர் சைவப்புலவர் செ. கந்த. சத்தியதாசன்

| ஆண்கள் அணி | பெண்கள் அணி |
|---|---|
| சைவப்புலவர் என்.ரீ. தரன் | க. ஜெயசிதன் |
| த.நகுலன் | ச. நவநீதன் |
| த. சுதன் | த. பிரதீப் |

* சிறந்த பாடகர் தெரிவு
* சிறந்த அறிவிப்பாளர் தெரிவு
* சோட்டோகான் கராட்டி அக்கடமியின் கராட்டிக் கண்காட்சி
* "இன்னிசை ராகங்கள்"
வழங்குவோர் சக்தி T.V புகழ் "சாரங்கா இசைக்குழு"
* நன்றியுரை : திரு.இ. மதிகரன
(நிர்வாக இயக்குநர், சக்தி பண்ணிசைமன்றம்)
அரியாலை – யாழ்ப்பாணம்

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

விழா சிறப்புற வாழ்த்துவோர்
அமரர் கந்தையா – சுப்பிரமணியம் அவர்களின் ஞாபகார்த்தமாக
திருமதி சுப்பிரமணியம் அவர்கள்
(C/5766) அரியாலை

## அரசியல் தீர்வில் உள்ள அக்கறையை நிரூபித்தால்

# விடுதலைப் புலிகள் மீதான தடையை நீக்கும் விடயத்தில் அமெரிக்கா கவனம் செலுத்தும்

### பிரதி இராஜாங்க அமைச்சர் ஆர்மிடேஜ் தெரிவிப்பு

(கொழும்பு)

**நீண்டகால யுத்தத்திற்கு முடிவு கட்டும் முகமாக அரசியல் தீர்வு ஒன்று காணப்படவேண்டும் என்பதில் விடுதலை புலிகளுக்கு உள்ள அக்கறையை நிரூபித்தால் அவர்கள் விதிக்கப்பட்டுள்ள தடையை நீக்குவது குறித்து அமெரிக்கா கவனம் செலுத்தும்.**



வாஷிங்டனில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு பேசிய அமெரிக்கா பிரதி இராஜாங்க அமைச்சர் றிச்சட் ஆர்மிடேஜ் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அந்நிகழ்வில் தொடர்ந்து கருத்து தெரிவித்த அமெரிக்கப் பிரதி இராஜாங்க அமைச்சர்,

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது தீவிரவாதப் போக்கை கைவிடுவார்கள் என்ற நம்பிக்கை அமெரிக்காவுக்கு தற்போது ஏற்பட்டுள்ளது.

அரசியல் ரீதியான தீர்வு காணப்பட்டு நாட்டு மக்கள் அனைவரும் இன, மத, மொழி வேறுபாடின்றி வாழ வேண்டும் என்பதில், தமிழீழ விடுதலைப்புலிகள் சில தீர்க்கமான முடிவுகளை எடுக்க வேண்டிய நிலை ஏற்படும்.

பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவினாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனாலும் செய்து கொள்ளப்பட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையினை முற்றுமுழுதாக பின்பற்றுவதற்கு இருதரப்புக்களும் முன்வரவேண்டும்.

இலங்கையில் அரசியல் ரீதியான தீர்வு காணப்பட வேண்டும் என்பதற்காக அரசாங்கமும், விடுதலைப புலிகளும் தொடர்ந்தும் தீவிர முயற்சிகளில் ஈடுபடவேண்டும்.

இதன் பின்னரே இலங்கையின் புனர்வாழ்வு மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு மேலதிக உதவிகளை வழங்குவது குறித்து அமெரிக்கா ஆராயும் எனவும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரதமரினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானத்திட்டத்திற்கு 1995 ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமராதுங்காவினால் வகுக்கப்பட்ட சமாதானத் திட்டம் முக்கிய பங்காற்றி உள்ளமையையும் ஆர்மிடேஜ் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், இதனடிப்படையில். தற்போதைய சமாதானத் தீர்மானங்களை பிரதமர் கொண்டு செல்வதனால், அது தொடர்பான முடிவுகளும் சரியான திசையில் செல்கின்றன.

இச்சமாதான நடவடிக்கைகளுக்கு ஆளும் கட்சி, எதிர்க்கட்சிகளும் ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என வலியுறுத்தியுள்ளார். தொடர்ந்து கூறுகையில், தனிநபர்கள் அல்லது தனி ஒரு கட்சியினால் பிரச்சினைகளுக்கு தீர்வு காண முடியாது. பிரதான கட்சிகளும், சமாதானம் தொடர்பான விடயத்தில் ஒற்றுமையுடன் செயற்படவேண்டும்.

நாட்டின் புனரமைப்பு, மீள்குடியேற்றம் மனிதாபிமான தேவைகள் என்பன சமாதான நடவடிக்கைகளுடன் ஒன்றிணைந்து ஒரு மித்த நேரத்தில் முன்னெடுக்கப்படுவது வரவேற்கத்தக்கது எனவும் ஆர்மிடேஜ் தெரிவித்துள்ளார். (உ-8)

## இந்தியா அருகில் இருக்க

# சமஷ்டி அமைப்புக்குறித்து ஆராய நாடு நாடாக அலைவானேன்?

### வினாத் தொடுக்கிறார் மகிந்த ராஜபக்ஷ

(கொழும்பு)

ஐரோப்பிய நாடுகளில் நிலவும்



சமஷ்டி ஆட்சி முறை குறித்து ஆராய்வதை விட, அயல்நாடான இந்தியாவின் சமஷ்டி முறை குறித்து அறிந்து கொள்வது சாலச்சிறந்தது.

இந்த விடயம் தொடர்பில், இந்தியாவை புறக்கணித்து விட்டு, ஐரோப்பிய நாடுகளின் சமஷ்டி ஆட்சி முறை குறித்து அரசாங்கமும், தமிழீழ விடுதலைப்புலிகளும் கவனம் செலுத்துவது எந்த வகையிலும் ஏற்றுக் கொள்ளக் கூடியதல்ல.

வாழ்க்கைச் செலவு அதிகரிப்புக்கு எதிராக நடந்தப்பட்டவுள்ள, மகக்ள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் தொடர்பாக விளக்கும் வகையில் அண்மையில் எதிர்க்கட்சி அலுவலகத்தில் நடந்த ஊடகவியலாளர் மாநாட்டில் எதிர்க்காட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அம்மாநாட்டில் எதிர்கட்சித் தலைவர் தொடர்ந்தும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டின் தற்போதைய சமாதான முயற்சிகளுக்கு ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க பூரண ஒத்துழைப்பு வழங்குவதாக உறுதியளித்துள்ளார்.

இந்நிலையில், சில அரசியல் வாதிகளும் ஊடகங்களும் சமாதான நடவடிக்கைகளுககு உதவ ஜனாதிபதி இனங்கவில்லை என கூறிவருகின்றன.

தமிழீழ விடுதலைப்புலிகள் அரசியல் ரீதியிலான அதிகாரப்பரவலாக்கலை தற்போது ஏற்றுக்கொண்டுள்ளனர் என்று குறிப்பிட்ட எதிர்க்கட்சித்தலைவர்,

இதனையே கடந்த 1994 ஆம் ஆண்டு முதல் ஜனாதிபதியும வலியுறுத்தி வந்தார் எனவும் அங்கு சுட்டிக் காட்டியுள்ளார். (உ-8)

## இசை விழாவில் இன்று

(யாழ்ப்பாணம்)

நல்லூர் இளங்கலைஞர் மன்ற வருடாந்த இசைவிழாவில் 3ஆம் நாளான இன்றைய பகல் நிகழ்வுகளாக ஈழத்து முதுபெரும் இளங்கலைஞர்கள் இணைந்து வழங்கும் பஞ்சரத்தின கீர்த்தனைகள் ஈழத்து முதுபெரும் நாதஸ்வரக் கலைஞர்களும் தவில் வித்துவான்களும் இணைந்து வழங்கும் நாதாஞ்சலி மற்றும் எஸ்.கணபதிப்பிள்ளை சியாமளாங்கி கருணாகரன் ஆகியோரின் பாட்டுக்கச்சேரிகள் என்பனவும் இடம்பெறவுள்ளன.

மாலை நிகழ்வுகளாக என்.சிவசுப்ரமணியம் குழுவினரின் நாதஸ்வரக் கச்சேரி மகேஸ்வரி சுப்ரமணியம், திருமதி ஞானகுமாரி சிவநேசன், பங்கயற்செல்வி முகுந்தன் என்.வி.எம். நவரத்தினம் ஆகியோரின் பாட்டுக் கச்சேரிகள் ஆர்.வசந்தனின் புல்லாங்குழல் இசை என்பனவும் இடம் பெறவுள்ளன. (உ)

## விலை அதிகரிப்பை அரசு பொறுப்பேற்கும்

(கொழும்பு)

பெற்றோலியப் பொருள்களின் விலை அதிகரிப்பினை அரசாங்கம் பொறுப்பேற்கவுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் லீற்றர் ஒன்றுக்கு மண்ணெண்ணை ஒரு ரூபா 20 சதத்தாலும், டீசலை ஒரு ரூபா 50 சதத்தாலும், பெற்றோலை 2 ரூபாவாலும் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் உயர்த்தி உள்ளதாக அறிவித்திருந்தது.

ஆனால், எரிபொருள் துறை அமைச்சு கருஜெயசூரிய, மக்களின் அசௌகரியங்களைத் தவிர்க்க நடவடிக்கை எடுக்குமாறு பிரதமரைக கேட்டுக்கொண்டார்.

இதற்கிணங்க அதிகரிப்புத் தொகையினை அரசாங்கம் பொறுப்பேற்றுள்ளது. இதனால் அரசாங்கத்துக்கு மாதாந்தம் 300 மில்லயன் அதிகப்படியான செலவினம் ஏற்பட்டுள்ளது.

இந்நடைமுறை ஒரு மாதத்தின் பின்னர் மீள்பரிசிலனை செய்யப்படவுள்ளதுடன், குறைந்தபட்சம் இரு மாதங்களுககு மட்டுமே அமுலில் இருக்கும் எனவும் நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (உ-8)

## 265 குடும்பங்கள் மீள்குடியேற்றம்

(மண்டைதீவு)

தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையினை அடுத்து மண்டைதீவுப் பிரதேசத்தில் சுமார் 265க்குமேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளன.

கடந்த கால யுத்தத்தினால் இடம் பெயர்ந்து வன்னி மற்றும் வவுனியா, மன்னார் ஆகிய மாவட்டங்களில் வசித்து வந்தஇவர்கள் கடந்த வருடம் ஏ-9 வீதி திறக்கப்பட்ட தையடுத்து இப்பகுதிக்கு மீண்டும் குடியமர ஆரம்பித்துள்ளனர். (உ-78)


## ஆரோக்கியமான சந்ததியை உருவாக்குவோம்!



உங்கள் பிள்ளைகளுக்கு மகிழ்வான, ஆரோக்கியமான நாட்களை வழங்குவதன் மூலம் அவர்களது எதிர் கால வாழ்விற்கு எதனிலும் பார்க்க பெறுமதியான சொத்தினை சேகரித்துக் கொடுத்தவர் ஆகின்றீர்கள்.

பிள்ளைகள் உங்களிடம் வேண்டி நிற்பது கூட்டுறவு மிக்க குடும்பத்தையும், அன்புடன் கூடிய வழிப்படுத்தலையுமே!

விளம்பர அனுசரணை- Sc(UK)

(C/5767)

தொடர்புகளுக்கு :
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு,
அறை எண் - 30
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.
T.P 222 2261 Ext 274

# பிறந்த திகதிக்குப்பொருந்தப்பெயரமைத்து சிறந்ததாக வாழ்க்கையைச் சீர் செய்யுங்கள்

(சென்ற வாரத் தொடர்ச்சி)

### உடல் எண்~6 கூட்டு எண்ணாகிய உயிர் எண்~8

6,15,24,போன்ற திகதியில் பிறந்து திகதி,மாதம்,வருடம் ஆகிய இம் மூன்றையும் கூட்டி வருகின்ற கூட்டு எண்ணாகிய உயிர் எண் 8 வருமே யானால் இவர்கள் சுக்கிரன், சனி ஆதிக்கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்கு சுமாரான உயரத்துடனும் சிறிது மிகுந்த சிவந்த கண்களுடனும் காட்சியளிப்பர். எந்தப் பொருளையும் உன்னிப்பாகக் கவனிப்பர். கடுமையாக முயன்று வெற்றி பெறுவதே இவர்கள் இலட்சியம் போக விஷயங்களில் அதிக நாட்டமுடைய இவர்கள் தமக்குத் தீங்கு விளைவிக்கும் எனத் தெரிந்தவுடன் இதைக குறைத்துக் கொள்வர். கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் தங்களுடைய கடுமையான உழைப்பால் தான் உயரமுடியும் எனக்கூறுவர். இவர்கள் மனம்,மோட்டார்,எலக்ட்ரிக் சாதனங்கள், கவிதை, கதை,ஆடம்பரப் பொருட்கள் ஆகியவற்றில் லயிக்கும். இந்த எண்ணிக்கையில் பிறந்த சிலர் ,இளமையிலே வசதி படைத்தவர்களாக இருந்தாலும் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் தமது தனித்தன்மையால் உயர்வர்.

ஆனால் பெயர் பொருத்தமின்றி இருக்குமேயானால் இவர்களது வாழ்வில் அடிக்கடி தோல்வியைச் சந்திக்க நேரிடும். உலகிலுள்ள அனைத்து விஷயங்களையும் தெரிந்து வைத்திருக்கும் இவர்கள் எப்போதும் எதையாவது செய்து கொண்டேயிருப்பர். தன்னால் முடிந்தவரை பிறருக்கு உதவுவதாலும் தம் தகுதியை உயர்த்திக் கொள்வர். இவர்களுக்கு பெயர் மட்டும் பொருத்தமானதாக அமைந்து விடுமேயானால் தாம் வகிக்கின்ற உத்தியோகத்திலோ,அல்லது தாம் செய்யும் தொழிலிலோ உயர்ந்த நிலையை அடைவர்.

மறைத்துப்பேசத்தெரியாத இவர்கள் எதையும் பகிரங்கமாக வெளியிடுவர். இவர்களுடைய மனம் வரலாற்றுப் புகழ் பெற்ற இடங்களைப் பார்ப்பதிலும் பெரிய தொழிற்கூடங்களைக் கண்டு களிப்பதிலும் ஆர்வம் காட்டும். இவர்களுடைய பிறந்த திகதிக்குப் பொருத்தமான பெயர் அமைந்து விட்டால் நல்ல ஆரோக்கியம், நல்ல வாழக்கைத்துணை,நல்ல குழந்தைகள்,நல்ல செல்வம் பெற்று வாழ்வர்.ஆனால் பிறந்த திகதிக்குப் பொருத்தமற்ற பெயா அமைந்து விட்டால் வீண் குழப்பஙகளும் விரயச் செலவுகளும் வந்து எதிர் நிற்கும். பிறருக்காக ஒரு பரசசினையில் இறங்கும் போது துணிவாகச் செயல்படுவர். ஆனால் தனக்கென்று வரும் போது மிக அமைதியாகச் செயர்படுவர். இவ்களிடம் யோசனை கேட்பதற்குப் பலர் வருவர்.

சட்டம்,சமயம்,மருத்துவம்,கணிதம் போன்றவற்றில் ஆராய்ச்சி இருக்கும். இவர்கள் எத்துறையிலும் இறங்கினாலும் சிறப்பான முன்னேற்றத்தைப பெறும் வாய்ப்புள்ளது. ஆனால் பிறந்த திகதி எண்களுக்குப் பொருத்தமற்ற பெயராக இருக்குமேயானால முனனேற்றம் தடைப்படும்.இந்த எண்ணிக்கையில் பிறந்தவர்களில் உத்தியோகம் பார்ப்பவர்கள் சிலர். ஆனால் தொழில் செய்பவர்கள் பலர் .வாகனம் ஓட்டுவதிலும் வாகனத்தை அலங்கரித்து வைத்துக் கொள்வதிலும் ஆர்வம் உடையவர்களாக இருப்பர். தூரதேசப் பயணங்கள் மேற்கொள்வதில் ஆர்வம் காட்டும் இவர்கள் தாம் செய்கின்ற பயணம் எதிர்காலத்தில் நல்ல வருவாய்ககு வழிகாட்ட வேண்டும் என எண்ணுவர்.பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்து விட்டால் படிப்படியாக வாழ்க்கையில் உயர்ந்த நிலையை அடைவர்.

### தொழில்

இந்த எண்ணிக்கைக்காரர்களுக்கு இரும்பு சம்பந்தப்பட்டநெருப்பு சம்பந்தப்பட்ட அனைத்து தொழிலும் சிறந்தவையே. மேலும் ஆடம்பரப் பொருட்களாலும் கமிஷன் ,கண்ட்ராக்ட், ஏஜென்ஸீஸ் போன்றவற்றாலும் இலாபம் பெறுவர்.

### நோய்

சுக்கிரன்,சனி ஆதிக்கம் கொண்ட இவர்களுக்கு வயிற்றுக்கோளாறு, மலச்சிக்கல்,உஷ்ண சம்பந்தப்பட்ட நோயு மூட்டுவலி ,இரத்தக் கொதிப்பு போன்றவைகள் வந்து நீங்கும்.

### பெயர்அமைக்கும் முறை

சுக்கிரன்,சனி ஆதிக்கம்,கொண்ட இவர்களுக்குச் சுக்கிரன், புதன், சூரியன் ஆதிக்கமான 15,24,33,42, 51,60,69,14,23,32,41,50,59,19,37, 46,64போன்ற எண்களில் பெயர் அமைத்துக் கொள்ளலாம்.

### பின்பற்றவேண்டியவை

யோகமான எண்-6,5,1 யோகமான திகதிகள்-6,15,24,5,14,23, யோகமான நிறம்-நீலம்,பச்சை, மஞ்சள் யோகமான மோதிரக்கல்-மரகதம், நீலக்கல்,ஆகாத திகதிகள்-3,12,21,30 ஆகாத நிறம்-கறுப்பு, சிவப்பு, றோஸ், ஒறேஞ்சு,கத்தரிப்பூ நிறம்.

### உடல் எண்~6 கூட்டு எண்ணாகிய உயிர் எண்~9

6,15,24,போன்ற திகதியில் பிறந்து திகதி,மாதம்,வருடம் ஆகிய மூன்றையும் கூட்டிவருகின்ற கூட்டு எண்ணாகய உயிர் எண்9 வருமேயானால் இவர்கள் சுக்கிரன், செவ்வாய் ஆதிக கத்தில் பிறந்தவராவர். இவர்கள் பார்ப்பதற்குக் கம்பீரமாகவும் குறுகுறுப்பான நடவடிக்கையும் கொண்டவராக இருப்பர்.6 எண்காரர்களில் இவர்கள் மகுந்த தைரியசாலி.எக்காரியத்திலும் துணிந்து இறங்கி விடுவர். நாம் இவ்வுலகத்தில் போராடி வெற்றி பெறவே பிறந்துள்ளோம் எனக் கூறுவர். இவர்கள் பேரறிவும்பெருஞ் சூழ்ச்சியும் கொண்டவர்கள் காந்த சக்தி நிறைந்த கண்களையுடையவர்கள் ,எதையும் உன்னிபபாகக் கவனிக்கும் ஆற்றல் உள்ளவர்கள்.

இவர்களது இலட்சியம் ஒரு உயர்ந்த இடத்தைப் பிடிக்க வேண்டும் என்பதுதான.வேதாந்தம் பேசும் இவர்கள் இவ்வுலகத்தை மாயை எனக் கூறினால் இவர்களுக்கு கடுமையாகக் கோபம் வரும். இந்த உலகிலே எத்தனையோ சுகங்கள் இருக்கின்றன மாயை எனக்கூறுகிறார்களே என வருந்துவர். ஆனால் இவர்கள் நாத்திகர்கள்.அல்ல எல்லா இன்பங்களையும் அனுபவிக்க வேண்டும் என்ற ஆசை கொண்டவர்கள் தன்னை உயர்த்திக் கொள்வதற்குச் சளைக்காது போராடுவர்.தாம் நினைத்ததை நடத்தி முடிப்பதற்கு ஓடோடி உழைப்பர். எப்பொழுதும் நண்பர்கள் புடைசூழ வாழ்வர் இவர்களது வாழ்க்கை மற்றவர்களுக்கு விசித்திரமாக இருக்கும் நேற்றுச் சாதாரணமாக இருநதவர் இன்று விண்மீன் போன்று மின்னிக் கொண்டிருப்பா.

இவர்களது பிறந்த திகதி எண்களுககுப் பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் படிப்படியாக வாழ்க்கையில் முனனேறிக் கொண்டேவருவர். பொது நலத்தொண்டு புரியும் இவர்கள் தன்னையும்,உயர்த்திக் கொண்டே செல்வர்.தன்னை உயர்த்திக் கொள்ளத தெரியாதவன்,பிறரை உயர்த்தத் தகுதியறறவன் எனக் கூறுவர். இப்படிப்பட்ட இவர்களுக்கு வாழ்க்கை ஒரு சர்க்கஸாகத் தெரியும். இவ்வுலகம் ஓர் இன்பமயமானது. அதில நாமெல்லாம் அனுபவிக்கப்பிறந்துள்ளோம் என வேதாந்தவாதிகளை எடுத்தெறிந்து பேசுவர்.

கடவுள் நம்பிக்கை கொண்ட இவர்கள் கோவிலுக்குப் போவதும் உண்டு. ஆனால் நம்பிக்கைதான் முக்கியம் எனக் கூறுவர்.எவ்வளவு தான்துன்பம் வந்தாலும, தைரியமாக எதிர்த்துப் போராடும் ஆற்றல் கொண்ட இவர்களுக்கு இளமையிலேயே பெயர் நன்றாக அமைந்து விட்டால் பெரும் செல்வந்தராக மாறி விடுவர். ஆனால் பெயர் நன்றாக அமையாதவர்கள் போராடிக்கொண்டேயிருப்பர்.

இவர்களுக்கு ஊர்சுற்றிப்பார்ப்பதில் மிகுந்த ஆர்வம் உண்டு. பொருளீட்டுவதற்கான வாய்ப்புகளிருந்தால் அதைப் பற்றி ஆராய்ந்து எப்படி இந்தத்தொழிலைச் செய்வது எனத்திட்டம் தீட்டிக் கொண்டிருப்பர்.

**ஆர். ஐ.துரைமுருகர்**

பலருக்கு உதவுவதன் மூலம் தானும் ஒரு லாபத்தை அடைவர். பொதுவாக இந்த எண்ணிக்கைக்காரர்களுக்குப் பொருத்தமான பெயர் அமைந்து விட்டால் உத்தியோகத்திலும், தொழிலிலும்,உயர்ந்த நிலையை அடைவர். இதனால் இவர்கள் பெயரை தமது பிறந்த திகதி எண்களுக்குப் பொருததமானதாக மாற்றி அமைத்துக் கொள்வது அவசியம் .பெயர் பொருத்தமானதாக அமைந்து விட்டால் நல்ல ஆரோக்கியம்,நல்ல வாழ்க்கைத்துணை, நல்ல குழந்தைகள், நிறைந்த செல்வம் பெற்றுச் சிறப்பாக வாழ்வர்.

### தொழில்

கண்ட்ராக்ட்,கமிஷன்,ஏஜென்ஸீஸ், அழகுசாதனங்கள்,ஆடம்பரப் பொருட்கள்,வாகன சம்பந்தமான தொழில் போன்றவற்றால் லாபம் பெறுவர்.

### நோய்

இரத்தக் கொதிப்பு,மூலநோய், மூட்டு வலி,உஷ்ண சம்பந்தமான அனைத்து நோய்களும், உடலுறவு சம்பந்தமான நோய்களும் வந்து நீங்கும்.

### பெயர்அமைக்கும்முறை

சுக்கிரன்,செவ்வாய்,ஆதிக்கத்தில் பிறந்த இவர்களுக்கு இதே ஆதிக்கமான 15,24,33,42,51, 60,69,27, 36,45 போன்ற எண்களில் பெயர் அமைக்கலாம்.

### பின்பற்ற வேண்டியவை

யோகமான எண்-6,9,யோகமான திகதிகள்-6,15,24,9,18,27,5,14, 23,யோகமான நிறம்-வெளிர் பச்சை, சிவப்பு வெளிர்நீலம், யோகமான மோதிரக்கல்- மரகதம், பவளம், ஆகாத திகதிகள்-3,12,21,30,ஆகாத நிறம்-றோஸ்,ஒறேன்ஸ் கத்தரிப்பூ நிறம்.

(தொடரும்)

## நினைவு நூல்

(குருநகர்)

அமரர் கம்யூனிஸ்ட் கார்த்திகேயன் மாஸ்டரின் 25-வது ஆண்டு நினைவு நூலொன்று 400 பக்கங்களில் கொழும்பில் வெளியிடப்பட்டுள்ளது.

தமிழ்,ஆங்கிலம் ஆகிய மொழிகளில் நூற்றுக்கணக்கான தமிழ், சிங்கள,ஆங்கில எழுத்தாளர்கள் கவிஞர்கள் கட்டுரைகள் மற்றும் கவிதைகள் நினைவு குறிப்புகளை எழுதியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் மேற்படிநூலின் அறிமுக விழா விரைவில் நடைபெறுமென நூல் வெளியீட்டுக் குழுவினா தெரிவித்துள்ளனர். (உ-74)

## அடிதடியில் இருவர்படுகாயம்

(யாழ்ப்பாணம்)

உறவினர்களுக்கிடையே ஏற்பட்ட வாய்த்தர்க்கம் அடிதடி வரை சென்றதால் இருவர் படுகாய மடைந்த நிலையில் யாழ் போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

சாவகச்சேரி பெரியமாவடிப் பகுதியில் இடம் பெற்ற இச்சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த வீ.தர்மேந்திரன் (வயது24) சி. றேனுகாதேவி (வயது31) ஆகய இருவருமே காயமடைந்தவர்கள் ஆவர். (இ-6)

## ஆன்மீக இயக்குநராக புதியவர்

(யாழ்ப்பாணம்)

யாழ்.போதானாவைத்தியசாலையில் கடந்த நாலரை ஆண்டுகளாகஆன்மீக இயக்குநராக பணியாற்றிய அருட்திரு செபமாலை அன்புராசா அடிகள் வவுனியா மறைபோதக பணிக் குழுவினரோடு பணியாற்ற சென்றுள்ளதால் அவரின் இடத்திறகு அருட்திரு டி.இ. இரட்ணராஜா அடிகள் நியமனம் செய்யப்பட்டுள்ளார் (உ)

## தடகளப்போட்டி

(மண்கும்பான்)

யாழ்.பிரதேச செயலக பிரிவுக்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டி நேற்று முன்தினம் முதல் யாழ் துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெற்று வருகின்றது.

இப்போட்டியின் இறுதி நாளான ஞாயலன்று இடம் பெறும் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக யாழ்.அரச அதிபா செ.பத்மநாதன் கலந்து கொள்ளவுள்ளார்.

இவ்விழாவில் சிறப்பு விருந்தினர்களாக மாவட்ட விளையாட்டு அதிகாரி திருமதி ஜே.எவ்.ஜே.ரூபசிங்கம் மற்றும் யாழ்.பிரதேச செயலர் செந்தில்நந்தனன் ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (உ-55)

# சரிந்த பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்ப பல்வேறு திட்டங்கள்

## இவ்வாண்டு நடைமுறைப்படுத்தப்படும் -பிரதமர்

ச(கொழும்பு)

கடந்த காலங்களில் போர்ச் சூழல் காரணமாக வீழ்ச்சி கண்ட பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்பும் நோக்கத்துடன அரசாங்கம் பல்வேறு திட்டங்களை இந்த வருட நடுப் பகுதியில் அமுல் படுத்தவுள்ளது.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்க நேற்று முன்தினம் காலை செய்தி நிறுவனம்ஒன்றுக்கு வழங்கிய தொலை பேசிப்பேட்டியில் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அப்பேட்டியில் தொடந்தும் கருத்து வெளியிடுகையில்,

நாட்டின் அபிவிருத்திக்காக யப்பானிய அரசாங்கத்திடம் இருந்து 260 மில்லியன் அமெரிக்க டொலர் நிதி உதவ் கிடைத்துள்ளது.

இந் நிதியிலிருந்து தோட்டத் தொழிலாளர்களின் வீடமைப்புத் திட்டத்துக்கென 140 கோடி ரூபாவும்,சப்பிர முவ மற்றும் மத்திய மாகாணங்களின் பாதை புனரமைப்புக்காக 450 கோடி ரூபாவும் ,கிராமிய அபிவிருத்திக்கு 460 கோடி ரூபாவும்,மின்சார உற்பத்திக்கு 576 கோடி ரூபாவும், ஹரவெலபிட்டிய மின் உற்பத்திக்கு 227 கோடி ரூபாவும் கிராமிய கட்டமைப்புக்கு 740 கோடி ரூபாவும் ஒதுக்கப்பட்டுள்ளது.

இந்தியா200 மில்லியன் டொலர்களை கடன் அடிப்படையில் உதவியுள்ளது. இக்கடன் 15 வருட இலகு கடன் அடிப்படையில் வழங்கப் பட்டுள்ளதுடன்,முதல் 5 வருடங்களுக்கு கடன் செலுத்துவது விலக்களிக்கப் பட்டுள்ளது.

இக் கடன் போக்குவரத்து விவசாயம்,கைத்தொழில் ஆகிய வற்றுக்கு இயந்திர மற்றும் உப கரணங்களை கொள்வனவு செய்யவும் அவற்றின் மேலதிக தேவைகளுக்காகவும் பயன படுத்தப்படவுள்ளது.

இளைஞர் அணித்திட்டம் இவ் வருடம் முதல் அமுல் படுத்தப் படவுள்ளது. வேலையற்ற பட்டதாரிகளிற்கு பயிற்சி வழங்கும் உலக வங்கியின் நிதியுதவி மூலமான திட்டமும், க.பொ.த (உ/த) பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு உற்பத்தி மற்றும் சேவைகள் போன்வற்றுக்கு பயிற்சி வழங்கும் திட்டங்களும் விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளன.

இவற்றுடன் வேலைவாய்ப்பு மற்றும அபிவிருத்தி தொடர்பான 30 திட்டங்கள் இவ்வருட இறுதிக்குள் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

சீனா அரசாங்கம் புனர்வாழ்வு புனரமைப்பு பணிகளுக்கென நிதி உதவியளித்துள்ளது. சீனாவின் இந்நிதியுதவியினை பயன்படுத்தவது தொடர்பாக ஆராய்வதற்கென சீனாவின் பிரதியமைச்சர் தலைமையிலான குழுவொன்று தற்போது இலங்கை வந்துள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பு சட்டம் இயற்றப்படவுள்ளதுடன்,ஊடகச் சுதந்திரம்,பெண்கள் உரிமை எனபன பாதுகாக்கப்படும் என்று குறிப்பிட்டார்.

மேலும்,ரோக்கியோவில் ஜூன் மாதம நடைபெறவுள்ள இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் மேலும் நிதி உதவிகிடைக்கும் எனவும் பிரதமர் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தாலும் தமிழீழ விடுதலைப் புலிகளினாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளில் முன்னேற்றம் ஏற்பட்டால் இலங்கைக்கு மேலும் உதவ் வழங்கத் தயாராக இருப்பதாக வெளி நாடுகள் உறுதியளித்துள்ளதாகவும் பிரதமர் அப்பேட்டியில் தெரிவித்துள்ளார். (உ-8)

# மானிப்பாய் சம்பவத்திற்கு மட்டக்களப்பு மதகுருமார் கண்டனம்

(மட்டக்களப்பு)

மானிப்பாய்ப்பகுதியில் விடுதலைப்புலிகளின் பெண் போராளிகள் மீதும் பொதுமக்கள் மீதும் இராணுவத்தினர் மேற்கொண்ட அடாவடித் தனத்தைக் கண்டித்து மட்டக்களப்பு மாவடட இந்து ஆலயங்களின் அறங்காவலா ஒன்றியத்தினால் நேற்று மாமாங்கேஸ்வர் ஆலயத்தில் கண்டனக் கூட்டம் நடத்தப்பட்டது.

மடடக்களப்பு மாவட்ட இந்து ஆலயங்களின் அறங்காவலர்களின் ஒன்றியத்தின உபதலைவர் க. தியாகராசா தலைமையில் இடம் பெற்ற இக்கூட்டத்தில்,

சமாதானப்பேச்சு வார்த்தைகள் விடுதலைப்புலிகளுக்கும், அரசுக்கும் இடையில் இடம் பெற்றுவரும இவ் வேளையில் அநாகரிகமான முறையில் இராணுவத்தினர் விடுதலைப் புலிகளின் பெண் போராளிகள் மீதும், பொதுமக்கள் மீதும் மேற் கொண்ட தாக்குதல் சம்பவத்தை வன்மையாக கணடிப்பதாக மட்டக்களப்பு மாவட்ட இந்து ஆலயங்களின் அறங்காவலர்கள் ஒருமித்த குரலால் ஆட்சேபனையை வெளிப் படுத்தியுள்ளனர்.

இக் கூட்டத்திற்கு மட்டக்களப்பு மாவட்டத்தின் பலபாகங்களிலும் இருந்தும் நூற்றுக்கணக்கான இந்து பிரதிநிதிகள் கலந்து கொண்டனர். (இ)

## மருத்துவ சேவை

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறைப்பகுதியில் இலவச மருத்துசேவையினை பிரதி புதன கிழமை தோறும் கியூ மெடிக்கா நிறுவனம் சுருவில் வீதியில் கிராம உத்தியோகஸ்தர் ஜே/49 பணிமனையில் நடத்தி வருகின்றது. (உ)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வலி.தெற்கு அரச சேவை ஓய்வூதியர் நம்பிக்கை நிதியத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23ஆம திகதி ஞாயிற்றுக்கிழமை மு.ப 9.மணிக்கு இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் மேற்படி நிதியத்தில் ஏற்கனவே அங்கத்தவர்களாக உள்ளவாகளுக்கு அங்கத்துவ விண்ணபப்படிவம் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-10)

# ஈராக்கில் பேரழிவு ஆயுதங்கள் இருப்பது அவதானிக்கப்படவில்லை

## ஐ.நா. ஆய்வாளர்கள் தகவல்

(நியுயோர்க்)

ஈராக்கில் பேரழிவை உண்டாக்கும் ஆயதங்களைத் தாங்கள் காணவில்லை என்றும், ஆனால் அவை இருப்பதைமறுக்க முடியாது என்றும் ஐ.நா ஆயுத ஆய்வாளர்கள் கூறியுள்ளனர்.

தலைமை ஆய்வாளர் ஹன்ஸ் பிளிக்ஸ் தனது முக்கிய அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருப்பதாவது,

ஐ.நா. ஆய்வாளர்கள் திடீர் சோதனையிட ஈராக் அதிக அளவில் ஒத்துழைத்தது.

அந்திரெக்ஸ் விஷவாயு மற்றும் தடை செய்யப்பட்ட ஆயுதங்கள் பற்றிய பட்டியல் ஈராக்கிடம் இல்லாதது கவலை தருகின்றது.

ஈராக் மீண்டும் அணு ஆயுதத் திட்டத்தை தொடங்கி விட்டது என்பதற்கு சான்று எதுவும் கிடைக்கவில்லை.

எனினும், பல பிரச்சினைகள் இன்னமும் ஆய்வில் உள்ளன என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த அறிக்கையில் ஐ.நா வின் ஆயிரத்து 441 வது தீர்மானம் பற்றிய கருத்து வேறுபாடுகள் தீவிரம் அடைந்துள்ளன என்று வாஷிங்டன் தெரிவித்துள்ளது.

ஆயுத ஆய்வாளர்களுக்கு மேலும் அதிக அவகாசம் வழங்கப்பட வேண்டும் என்று பிரான்ஸ், ஜேர்மனி, ரஷ்யா ஆகிய நாடுகள் கருத்து வெளியிட்டிருப்பதும்,

ஈராக் பற்றிய ஐ.நா தீர்மானம் உடனடியாக அமுலாக்கப்பட வேண்டும் என்று அமெரிக்காவும், பிரிட்டனும் வலியுறுத்தியிருப்பதும் குறிப்பிடத்தக்கது.

இது இவ்வாறிருக்க, ஈராக் முனைப்புடன் ஒத்துழைக்க வேண்டும் என்று சீனா கேட்டுள்ளது.

ஐ.நா ஆயுத ஆய்வாளர்களுடன் ஒத்துழைக்க தன்னால் இயன்றதை எல்லாம் ஈராக் செய்யும் என்றும் அந்நாட்டுத் துணைப்பிரதமர் கூறியுள்ளார்.

பயங்கரவாதிகளுடன் தமது நாட்டிற்கு தொடர்பில்லை என்று கூறிய அவர், ஈராக்கைப் பாதுகாக்க அல்கெய்டா பயங்கரவாத அமைப்பின் ஆதரவு தேவையில்லை என்றும் சுட்டிக்காட்டியுள்ளார்.(உ-9)



தென்னாபிரிக்காவில் நடைபெற்று வரும் உலகக் கோப்பை கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தான், ஆஸ்திரேலியா மோதும் போட்டி நடைபெற்ற விளையாட்டரங்கில் கங்காருவைப் போன்று உடையணிந்து விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்த வந்திருந்த சிறுவர் சிறுமியர்.

# ஈராக்கில் தங்கியுள்ள ஜப்பானியரை நாடு திரும்புமாறு அழைப்பு

(டோக்கியோ)

அமெரிக்காவின் யுத்த முஸ்திபுகளை அடுத்து ஈராக்கில் தங்கியுள்ள ஜப்பானியரை நாடு திரும்புமாறு ஜப்பான் அரசு அவசர உத்தரவு ஒன்றைப் பிறப்பித்துள்ளது.

36 ஜப்பானியர் ஏற்கனவே அங்கு தங்கியிருப்பதாகவும் சமாதானப் பிரசாரங்களை மேற்கொள்வதற்காக மேலும் 80 ஜப்பானியர்கள் அங்கு செல்லத்திட்டமிட்டிருப்பதாகவும் ஜப்பானிய வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

அமெரிக்கா, பிரிட்டன் அவுஸ்திரேலியா உள்ளிட்ட நாடுகள் பலவும் தமது பிரஜைகளை ஈராக் செல்ல வேண்டாம் என ஏற்கனவே பணித்திருப்பது குறிப்பிடத்தக்கது.(உ-9)

# காந்த உடை விற்ற பெண் கைது

(புதுடில்லி)

சென்னை தியாகராஜா நகரில் போலியான காந்த உடைகளை விற்பனை செய்து வந்த பெண் உள்ளிட்ட 4 பேரை காவல்துறையினர் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

இவர்களில் இரண்டுபேர் மலேசியாவைச் சேர்ந்தவர்கள் இது தொடர்பில் மேலும் சிலர் தேடப்பட்டு வருகின்றனர். (உ-9)

# நேபாள அமைதிப்பேச்சுக்கள் ஆரம்பமாக காலம் பிடிக்கும்

(காத்மண்டு)

நேபாள அரசாங்கத்திற்கும், மாவோத்தீவிரவாதிகளிற்கும் இடையிலான சமாதான பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு நீண்டகாலம் செல்லலாம் என்று அரசாங்க அமைச்சர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இந்தப் பேச்சு வார்த்தைகள் வெற்றியளிப்பதற்குத் தேவையான விடயங்களை இருதரப்பினரும் தயார் செய்ய வேண்டியிருப்பதால் தாமதம் ஏற்படக் கூடும் என்று அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

இருதரப்பினரும் கடந்த மாத இறுதியில் காலவரையறையற்ற யுத்த நிறுத்தத்தை அறிவித்து பேச்சு வார்த்தை நடத்துவதற்கு இணைங்கினார்கள்.

எனினும் பூர்வாங்கப் பேச்சு வார்த்தைக்கான திகதி இன்னும் நிர்ணயிக்கப்படவில்லை. பேச்சு வார்த்தைகள் குறித்து அவசரப்படத் தேவையில்லை என்று குறிப்பிட்ட பௌதீக திட்ட மற்றும் தொழில அமைச்சர் நாராயணன் ஹிக்பூன் உறுதியும், நீடித்து நிலைக்கக் கூடியதுமான தீர்வு காணப்பட வேண்டும் என்பதே தமது குறிக்கோள் என்றும் தெரிவித்துள்ளார்.

சமாதான பேச்சுவார்த்தைகளுக்கான இணைப்பதிகாரியாக இந்த அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ள இதேவேளை தீவிரவாதிகள் சார்பாக ஐவர் பேச்சு வார்த்தைக்கு பெயரிட்டுள்ளனர். (பி-.09)


# இரு கப்பல்கள் மோதிக்கொண்டன

(பெய்ஜிங்)

சீன எண்ணெய் தாங்கிக் கப்பல் ஒன்றும் கம்போடிய சரக்குக் கப்பல் ஒன்றும் சங்ஹாயிலுள்ள ஜங்சியா ஆற்றில் மோதிக் கொண்டதில் இருபது தொன் எண்ணெய் கசிந்து நீரில் கலந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்பொழுது எண்ணெய் கசிவு கட்டுப்படுத்தப்பட்டுள்ளதுடன் நீர் சுத்திகரிக்கப்படுவதாகவும் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

இந்த விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது தொடர்பாக விசாரணைகள் நடைபெற்று வருகின்றன. (பி-09)



வாஷிங்டன் நகரில் அல்கெய்டாவினர் செப்ரம்பர் 11 தாக்குதலுக்கு இணையான தாக்குதலை நடத்தக் கூடும் என்ற அச்சுறுத்தல் ஏற்பட்டதைத் தொடர்ந்து, வாஷிங்டன் நினைவிடம் அருகே அமெரிக்க இராணுவ வாகனத்தில் விமானங்களைத் தாக்கக் கூடிய ஏவுகணைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருக்கும் காட்சி.

# மத்தியகிழக்கிற்கு மற்றோர் யுத்தக்கப்பல் கனடா அனுப்பும்

(ஒட்டாவா)

மத்திய கிழக்கிற்கு மற்றுமொரு யுத்தக் கப்பலை அனுப்பி வைக்க கனடா தீர்மானித்துள்ளது.

நாசகாரிக் கப்பலான எர்பீஷ் அடுத்த 10 நாட்களுக்குள் வளைகுடாப் பகுதிக்குப் பயணமாகும் என்று கனடாவின் பாதுகாப்பு அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் அல்கெய்டா மற்றும் தலிபான் ,இயக்கத்தினரை தேடும் நடவடிக்கைகளிற்காக இந்தக் கப்பல் அனுப்பிவைக்கப்படுவதாகவும் தேவையேற்படின் அதை ஈராக் நோக்கி திசை திருப்பவும் திட்டமிட்டிருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்ட கப்பல் மத்திய கிழக்கிற்கு அனுப்பப்பட்டாலும் ஈராக் மீதான அமெரிக்காவில் உத்தேச யுத்தத்திற்கு உதவி வழங்குவது பற்றி கனடா இன்னும் தீர்மானிக்க வில்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ-9)

# கொலம்பிய தலைவரைக் கொல்ல தீவிரவாதிகள் முயற்சியா?

(போகோடா)

கொலம்பியாவில் ஏற்பட்ட குண்டு வெடிப்புச் சம்பவத்தில் 15 பேர் கொல்லப்பட்டதுடன் 30பேர் காயமடைந்துள்ளனர்.

கொலம்பியாவின் தெற்குப் பகுதியில் இடது சாரித் தீவிரவாதிகள் வீடு ஒன்றில் பதுக்கி வைத்திருந்த வெடி பொருட்களை கண்டு பிடிக்கும் பொருட்டு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே இந்தக் குண்டு வெடிப்புச் சம்பவம் நிகழ்ந்துள்ளது.

கொலம்பிய ஜனாதிபதி அல்பாரோயுரெச்சை கொலை செய்யும் சதிமுயற்சிக்காகவே ஆயுதங்களும் வெடி பொருட்களும்,சம்பந்தப்பட்ட வீட்டில் தீவிரவாதிகளால் மறைத்து வைக்கப்பட்டன என்று பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, கொலம்பியாவில் இடதுசாரித் தீவிரவாதிகள் அமெரிக்கப் பிரஜை ஒருவரையும் கொலம்பிய இராணுவ வீரர் ஒருவரையும் சுட்டுக் கொன்றுள்ளனர்.

கொலம்பியாவின் தெற்குப் பகுதியிலுள்ள தீவிரவாதிகள் கூடுதலாக உள்ள காட்டுப் பகுதியில் அமெரிக்க வாகனம் ஒன்று அவசரமாகத் தரையிறக்கப்பட்டதை அடுத்து இந்த சம்பவம் நிகழ்ந்துள்ளது.

விமானத்தில் ஏற்பட்ட இயந்திரக் கோளாறு காரணமாகவே அது அவசரமாக தரையிறக்கப்பட்டதாகவும் இந்த விமானத்திலிருந்த ஏனைய 3 அமெரிக்க பிரஜைகளை காணவில்லை என்றும் மேலும் தெரிவிக்கப்படுகிறது. (உ-9)

# உல்லாசப் பயணிகள் சென்ற படகு கவிழ்ந்தது

(தாகா)

பங்களாதேஷில் 200பேரை ஏற்றிச் சென்ற படகொன்று கவிழ்ந்ததில் ஒருவர் கொல்லப்பட்டதுடன் பலர் காணாமல் போயுள்ளனர்.

மேற்கினாநதியில் இடம்பெற்ற இந்த அனர்த்தத்தை அடுத்து பொலிஸாரும் மீட்புப் படையினரும் அங்கு விரைந்துள்ளனர்.

ஹஜ் பெருநாளை முன்னிட்டு உல்லாசப் பயணம் மேற்கொண்ட சுமார் 200 பேர் படகில் இருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது. (உ-9)



விருது வழங்கும் விழாவில் குடியரசுத் தலைவரிடமிருந்து சிறந்த நடிகைக்கான விருதினைப் பெறுகிறார் நடிகை தபு.

# விண்வெளி செல்ல மற்றோர் இந்தியப் பெண்ணை நாசா தெரிவு செய்தது

(அஹமதாபாத்)

அமெரிக்காவிலுள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் மற்றொரு இந்தியப் பெண்ணைத் தேர்வு செய்துள்ளது.

குஜராத் மாநில முன்னாள் உள்துறை அமைச்சர் ஹரென் பாந்தியாவுக்கு சொந்தக்காரரான இந்தப் பெண்ணின் பெயர் சுனிதா லின் வில்லியம்ஸ். இவர் அமெரிக்காவில் கடற்படை கல்லூரியில் பட்டம் பெற்றவர்.

சுனிதாவை விண்வெளிக்கு அனுப்ப நாசா விண்வெளி ஆராய்ச்சி நிலையம் தேர்வு செய்துள்ளதை அவரது குடும்ப வட்டாரங்கள் உறுதி செய்துள்ளன.

37வயதான சுனிதா ஒரு ஹெலிகொப்டர் பைலட்டும், ஹெலி கொப்டர் பயிற்சியாளருமாவார். (உ-9)

அறிகொன்று அறியான் எனினும் உறுதி
உழையிருந்தான் கூறல் கடன்

—குறள்

# வலம்புரி

## அநியாயமான கோரிக்கை

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக கைவிடும் வரை ஜப்பான் அரசாங்கம் வடக்குக் கிழக்குப் புனரமைப்புக்கு எந்த உதவியையும் வழங்கக் கூடாதென ஜப்பானின் விஷேட தூதுவர் அகாஷியிடம் கோரவுள்ளதாகப் பொது ஜன ஐக்கிய முன்னணியின் பேச்சாளர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார். யுத்தத்தால் பாதிபபடைந்துள்ள வடக்கு கிழக்கை புனரமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட- அம் முயற்சிகளுக்கு ஜப்பான் தனது பூரண ஒத்துழைப்பை வழங்கி நிதியுதவ் செய்ய முன் வந்திருக்கும்போது, அதனைத் தடுப்பதற்கு பிரதான எதிர்க் கட்சியான பொது ஜன ஐக்கிய முன்னணி முயற்சிப்பது தமிழ் மக்களுக்குச் செய்யும், மிகப்பெரும் துரோகத் தனமாகும.

சமாதான முயற்சிகளுக்கு தமது பூரண ஆதரவுணடெனக கூறிவரும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான பொது ஜன ஐக்கய முன்னணி ஜப்பான் வழங்கவிருக்கும உதவிகளை வழங்க வேண்டாமெனக் கேட்க விருப்பது எவ்வகையிலும் பொருத்துடையதல்ல.

விடுதலைப் புலிகள் ஆயுதங்களைக் கைவிட வேணடுமெனக் கேட்பது தற்போது பொருத்தமானதல்லவென நாட்டின் பிரதமர் ரணில் விக்கிரம சிங்காவும், அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸும் தெரிவித்திருந்தனர்.

இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதற்கு முன்னதாக ஆயுதங்களைக் கைவடுமாறு விடுதலைப் புலிகளிடம் கேட்க முடியாதென்பது அவர்களின் நியாயமான கருத்து. இக் கருத்தையே சமாதான முயற்சிகளுக்கு ஏற்பாட்டாளராக இருக்கும் நோர்வே அரசும் வலியுறுத்துகிறது. இந் நிலையில், விடுதலைப் புலிகள் ஆயுதத்தைக் கைவிடும் வரை ஜப்பான் நிதியுதவி எதனையும் வழங்கக் கூடாதென பொது ஜன ஐக்கிய முன்னணி ஜப்பாணிடம் கோரிக்கை விடுமாக இருந்தால், நிரந்தர சமாதானம் ஏற்படுவதில் பொது ஜன ஐக்கிய முன்ணணிக்கு உடன்பாடில்லை என்பதே உண்மை.


விடுதலைப் புலிகள் அமைப்பை சர்வதேச ரீதியாகத் தடைசெய்ய முற்பட்ட பொது ஜன ஐக்கிய முன்னணி இப்போது சர்வதேசத்தின் உதவிகளைத் தடுக்க முற்படுகின்றது.

இத்தகைய சமாதானத்திற்கு விரோதமான கோரிக்கைகளுக்கு வெளி நாடுகள் செவிசாய்க்குமாக இருந்தால் அது இலங்கையில் மீண்டும் யுத்தம் ஏற்படுவதற்கு ஊக்கம் அளிப்பதாகவே இருக்கும்

எனவே, சர்வதேச நாடுகள் இனவாதப் போக்குடையவர்களை வெளிப்படையாகக் கண்டிக்க முன்வரவேண்டும்

# இறை நம்பிக்கை கொண்டவர்களுக்கே ஆசீர் கடமையை மட்டும் செய்பவர்களுக்கு இல்லை

மனிதர்கள் பெரும்பாலும் மற்றவர்கள் தங்களைப் புகழவேண்டும் என்பதற்காகவே எக்காரியத்தையும் செய்ய முற்படுகின்றனர். பிறரின் தேவையை அறிந்து நன்மை செய்ய முற்படுபவர்கள் சிலரே. ஏதாவது ஒரு உதவியைச் செய்வதன் மூலம்



எமக்கு எவ்வளவு இலாபம் கிடைக்கும் எனவே அக்காரியத்தை நாம் முன்னின்று நடாத்த வேண்டும் என்று அவாக் கொள்பவர்களும் பலர் இருக்கிறார்கள். இயேசுவிடம் தொழுநோயாளி ஒருவன் வந்து என்னைக் குணமாக்க உம்மால் கூடும் என்று வேண்டினான். இயேசு அவனுடைய விசுவாசத்தைக் கண்டு 'விரும்புகிறேன் குணமாகுக' என்று அவன் மீது கையை நீட்டினார். அந்நோயாளி பூரண சுகம் பெற்றான். ஆனால் அவன் தனக்கு செய்த நன்மையை நினைத்து நடந்ததைச் சொல்லி விளம்பரப்படுத்தினான்.

**இறைவல்லமை**

இயேசு தம் பணியைத் தொடங்க முன்னர் தன் தந்தையுடன் செபம் மூலம் உரையாடுவார். தமக்கும் தந்தைக்கும் இடையிலுள்ள உறவை அவர் அடிக்கடி புதுப்பித்துக் கொண்டார். அதனாலே அவர் தந்தையின் வல்லமை பூண்டவராகச் செயற்பட்டார். எதைச் செய்யவும் வல்லமையும், ஆற்றலும தந்தை அவருக்கு அளித்தார். தம்மோடு இருந்த தம் சீடர்களுக்கும் இயேசு தம்முடைய வழியைக் கற்பித்தார். அதனாலேயே இயேசு இறந்து விண்ணகம் சென்ற பின்பும், சீடர்களும் இயேசுவைப் போல

## பரமபிதாகாட்டிய பாதை

வல்ல செயல்களைச் செய்தார்கள். இதனாலே கவரப்பட்ட பலர் திருச்சபையின் மக்களானார்கள். இன்னும் இப்பணியானது திருச்சபையின் மூலம் முன்னெடுக்கப்பட்டுக் கொண்டே வருகின்றது.

**நற்செய்திப்பணி**

திருமுழுக்கு என்ற அருட்சாதனம் மூலம் திருச்சபை உறுப்பினர்களாகச் சேர்ந்து கொண்ட ஒவ்வொருவரும் இயேசு விட்டுச் சென்ற அன்பின் நற்செய்திப் பணியைத் தொடர்ந்தாற்ற அழைக்கப்பட்டுள்ளார்கள். நாமும் எமது சேவைகளும் பொறுப்புக்களும் இவற்றிலே ஈடுபட எமக்கு நேரமில்லை. யாரும் பார்த்துக்கொள்ளட்டும். நாம் திருப்பலிக்குச் செல்கின்றோம். காணிக்கை செலுத்துகின்றோம். ஆலய நிதி கட்டுகின்றோம் என்றுவறட்டு வேதாந்தம் பேசுவோர் தொகை இன்று அதிகரித்துள்ளது. கடவுளால் ஆகாதது ஒன்றுமில்லை என்று யாரெல்லாம் இறைவனுக்கு வேதத்தை ஓதுகிறார்களோ அவர்கள் இறைவனாலேயே ஆசீர் பெறுவார்கள். கடமையை மட்டும் செய்பவர்கள் கருணை மனம் படைத்தவர்களாக இருக்க மாட்டார்கள். சட்டங்களோ சம்பிரதாயங்களோ இரக்கத்தின் முன் நிற்க மாட்டா. இன்பத்திலும் துன்பத்திலும் இறைவனை நினைத்து நன்றி கூறிப் பழக வேண்டும். 'எதைச் செய்தாலும் எல்லாம் கடவுளின் மகிமைக்காகச் செய்யுங்கள்' (1 கொரி 10:31) என்று புனித பவுல் எமக்கு அறிவுரை கூறுகின்றார். அவரின் அறிவுரைகளைக் கடைப்பிடிப்பது எங்கள் ஒவ்வொருவரின் கடமை மட்டுமல்ல. தகுதியும் நீதியுமானது ஆகும்.

**அன்புச் சமுதாயம் உருவாக வேண்டும்**

கடவுள் தன்மையில் விளங்கிய அவர் எமக்காக அடிமை உருவை ஏற்றார என்றால் நாம் ஏன் பெருமை பாராட்ட வேண்டும். தூசுக்குச் சமமானவர்கள் மண்ணோடு மண்ணாக அழிந்து போகும் சாயலானவர்கள். படைத்தவனை மறந்து மார்பு தட்டுகின்றோம். அன்புச் சமுதாயத்தை உருவாக்க வேண்டியவர்கள் ஆணவச் சமுதாயத்தைக் கட்டி வளர்க்கின்றோம். மூத்தோரை மதியாத முன்னேற்றம் விரும்பாத, அறிவுரைகள் மறுக்கின்ற அடங்காச் சமுதாயமாக மாறிவருகின்றோம். நீதித் தராசிலே நாம் எமக்குச் செய்த செயல்களும் நாம் பிறருக்கு ஆற்றிய செயல்களுமே நிறுக்கப்படப் போகின்றன. அதன் அடிப்படையில் தான் கிறிஸ்தவனுக்கு தீர்ப்பு வழங்கப்படும்.

கல்விச் சமூகங்கள் காசுக்காக உருவாகாமல் கடமை, கண்ணியம், கட்டுப்பாடுள்ள கருணைச் சமூகத்தை உருவாக்க வேண்டும். அழிவின் பாதையைத் தேடிச் செல்லுகின்ற அரும்புகளை அன்பினாலே அரவணைத்தாள வேண்டும். அன்னைக்கும் மண்ணுக்கும் அரும் புதல்வர்களாக, புதல்விகளாக உருவாக ஆவன செய்ய வேண்டும். அன்பின் வள்ளல் இயேசு பெருமானின்

**ஏ.ஏ.பி.ராஜன்**

அருள் மொழிகளையும் கருணைச் செயல்களையும் மனித குலத்துக்கு மனமாரச் செய்ய வேண்டும். வாழ்வாலும் சாவாலும் அருட்கொடை வள்ளல்களாகப் பலன் கொடுக்க முன்வர வேண்டும். எல்லாத் தேவையிலும் நன்றியோடு கூடி செபத்திலும் மன்றாட்டிலும் இறைவனிடம் அருள் பெற்று வாழ முன்வாருங்கள்.

# சற் ஸ்கோர் புள்ளியிடல் மாற்றப்படமாட்டாது

## தேசிய கல்வி ஆணைக்குழு அறிவிப்பு

(கொழும்பு)

கல்வி அமைச்சினால் புதிதாக அறிமுகப்படுத்தப்பட்ட சற்ஸ்கோர் புள்ளி அடிப்படையில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்குச் சேர்த்துக் கொள்ளும் திட்டம் எந்தக் காரணத்தைகொண்டும் மாற்றியமைக்கப்பட மாட்டாது. தேசிய கல்வி ஆணைக் குழுவின் பிரதித் தலைவர் பேராசிரியர் கே.ஜே. அருள்பிரகாசம் இவ்வாறு அறிவித்துள்ளார். பாராளுமன்ற தெரிவுக குழுத் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் படி மாவட்டக் கோட்டா முறை தொடர்ந்தும் அதே அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும்.

சற்ஸ்கோர் அடிப்படையில் மாணவர்களை பல்கலைக்கழகங்களுக்கு தெரிவு செய்யும் முறையினை இரத்து செய்யுமாறு பல கோரிக்கைகள் விடப்பட்டன. இதனை அடுத்து, இதுபற்றி ஆராய மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சர் கபீர் ஹாசீம் பாராளுமன்றத் தெரிவுக் குழுவொன்றை நியமித்திருந்தார்.

இக்குழு கடந்த பல மாதங்களாக ஆராய்ந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளது என்று அவர் மேலும தெரிவித்துள்ளார். (உ-8)

# இன்று சிரமதானம்

(யாழ்ப்பாணம்)

ஜீ.ரீ.சற் நிறுவனமும் மக்கள் நலன் காக்கும் பிரிவும் இணைந்து மேற்கொள்ளும் பாடசாலை சமூக மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ்இன்று காலை9மணிக்கு அச்சுவேலி தோப்பு அருள் நந்தி வித்தியாசாலை மற்றும் கதிரிப்பாய் வித்தியாசாலை ஆகியவற்றில் சுற்றாடல் சிரமதானப் பணி இடம் பெறவுள்ளது.

இச் சிரமதானம் பணியில் பாடசாலைச் சமூகத்தைச் சேர்ந்தவர்களையும் கலந்துகொள்ளுமாறு திட்ட ஊக்குவிபபாளர் செல்வி என்.நிலானி தெரிவித்துள்ளார். (இ)

## உள்ளூராட்சி மன்ற

# ஊழியர்களின் கடமைகளைக் கண்காணிக்கக் குழு

(கொழும்பு)

மாகாண சபைகள், உள்ளூராட்சி மன்றங்கள் என்பனவற்றில் கடமை யாற்றும் ஊழியர்களின் பொறுப்புக் களை திடீர் சோதனை செய்வ தற்கு உள்துறை அமைச்சு அவ்வவ் அலுவலகங்களைச் சேர்ந்த அதிகாரிகள அடங்கிய குழுவொன்றை நியமித்துள்ளது.

இக்குழு மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி மன்றங்களில் கடமையாற்றும் ஊழியர்களின் கடமை நேரங்களையும், அவர்களின் பணிகளையும் சோதனையிடும்.

இதற்கமைய மாத்தளை மாவட்ட பிரதேச செயலகத்துக்கு நேற்று முன் தினம் விஜயம் செய்த அதிகாரிகள் குழுவொன்று அங்கு பணியாற்றிய ஊழியர்களின் சீர்கேடுகளைக் கண்டறிந்துள்ளனர். (உ-8)

## தினசரி தியானம்

### உணவு

உணவுத் தூய்மை மனத்தூய்மையைத் தருகின்றது. மனமானது உணவுச் சாரத்தின் புலப்படா நுணுக்கமான பொருளாகும். உணவு பிரம்மச்சாரியத்துடன் நெருங்கிய தொடர்புடையது. நாம் எடுத்துக் கொள்ளும் உணவு தூய்மையாய் இருக்க வேண்டும் என்பதில் விழிப்புடன் இருந்தால் பிரம்மச்சாரியத்தைக் கடைப்பிடிப்பது எளிதாகும்.

ஆத்மீகத்தை விழைபவர் தொடக்கத்தில் தம் உணவுக்கானவற்றை தேர்ந்தெடுப்பதில் மிக விழிப்புடன் இருத்தல் வேண்டும். சாத்வீகமான உணவைக் கொள்க. பசித்தபோது மட்டும் உண்க.

சுவாமி சிவானந்தர்

# காரை–காவலூர் பாதை படகுச் சேவை குறைப்பு

(காரைநகர்)

காரைநகர் ஊர்காவற்றுறைக்கான பாதைப் படகுச் சேவை இரு தடவைகளாக குறைக்கப்பட்டுள்ளமை குறித்து காரைநகர் பகுதி பொது மக்களும் அரச உத்தியோகத்தர்களும் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பாதைப் படகுச்சேவை குறைப்புத் தொடர்பாக கடற்படையினரால் அறிவித்தல் ஒன்று விளம்பரப் படுத்தப்பட்டுள்ளது.

கடற்படையினரின் தகவலின் படி, காலை 8 மணிக்கு காரைநகரில் இருந்து ஊர்காவற்துறைக்குச் செல்லும் பாதைப்படகு, மாலை 2.45 மணிக்கே மீண்டும் ஊர்காவற்துறையில் இருந்து காரைநகர் திரும்பும் என்றும், மாலை 5.30 மணிக்கு காரைநகரில் இருந்து ஊர்காவற்துறைக்குச் செல்லும் பாதைப்படகு மீண்டும் 5.45 மணிக்கே திரும்பும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எரிபொருட் தட்டுப்பாடு காரணமாகவே இப்படகுச் சேவைக் குறைப்பு இடம்பெற்றுள்ளதாகவும், கடற்படை அறிவித்துள்ளது.

கடற்படையினரின் இப் பாதைப் படகு சேவைக் குறைப்பு அறிவித்தல் தொடர்பாக தீவகம் வடக்கு பிரதேச செயலர் ஜே.எஸ்.செல்வநாயகத்திடம் மேற்படி பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் முறையிட்டதாகவும் தெரிய வருகின்றது.

இப்பாதைப் படகினூடாக நாள் தோறும் பல நூற்றுக் கணக்கான பொதுமக்கள், அரச உத்தியோகத்தர்கள், வர்த்தகர்கள், பாடசாலை மாணவர்கள் உட்படப் பலதரப்பட்டவர்கள் பிரயாணம் செய்வது குறிப்பிடத்தக்கது. (உ-246)

## தென்னிலங்கை இளைஞர்கள்

# சவப்பெட்டிகளில்வரும் காலம் ஒழிந்துவிட்டது

(காலி)

தென்னிலங்கை இளைஞர்களை வடக்கிலிருந்து சவப்பெட்டிகளில் கொண்டுவரும் காலம் முற்றுப் பெற்றுவிட்டது. இதற்கான பெருமை பிரதமமந்திரி ரணில் விக்கிரம சிங்கவிற்கே உரியது.

இவ்வாறு காலியட்டகல ரஜமாகா விகாரையில் இடம்பெற்ற வைபவத் தில் பேசிய விகாரையின்சங்கநாயக்கர் வண. பல்லத்தர சுமணஜோதி நாயக்க தேரர் கூறினார்.

இந்தவைபவத்தில் பிரதமமந்திரி ரணில் விக்கிரம நாயக்கவும் கலந்து கொண்டார்.

பிரதமமந்திரி இவ்வைபவத்தில் பேசுகையில், யுத்தம் ஒரு முடிவுக்கு வந்துக் கொண்டிருக்கிறது. இதற்கு அரசாங்கமும் தமிழீழ விடுதலைப் புலிகளும் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமே காரணம் என்றார்.

பிரதமர் அங்கு மேலும்பேசுகை யில், 55 ஆண்டுகளுக்கு முன்னர் அமரர் டி.எஸ். சேனநாயக்காவால் சுதந்திரம் பெற்றுத் தரப்பட்டது. ஆனால், குறுகிய கால அரசியல் கொள்கைகளினால் நாட்டில் பிரிவினைவாதமும், பயங்கரவாதமும் தலைதூக்க ஆரம்பித்தன என்றார்.

யுத்தம் தற்பொழுது நின்றுவிட்டாலும், வெளிநாட்டுக்கடன்கள் பெரும் பிரச்சினையாகவே இருந்து வருகின்றன. வாழ்க்கைச் செலவு வானத்துக்கு உயர்ந்து விட்டிருக்கின்றது. ஆனால் 2004ஆம் ஆண்டு வரை இந்தப் பிரச்சினைக்கு முழுமையான தீர்வுகளைக் காண்பது சாத்தியமாகாது என்று பிரதமர் மேலும் கூறினார். (பி)

# உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி

(சண்டிலிப்பாய்)

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி இன்று காலை 8.30 மணிக்கு கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது. (உ-258)

## அரச.....

இடம் பெற்ற தீ விபத்துச் சம்பவமானது, முக்கிய புள்ளிகளை சட்டத்தின் பிடியில் இருந்து தப்பவைப்பதற்கான பாரியதொரு சதி முயற்சியாக இருக்கலாமென முன்னர் செய்திகள் வெளியாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## பிரதமர்...

போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையில் தொடரும் சமாதான முயற்சிகள் குறித்து இந்தியப் பிரதமர் அடல் பிஹாரி வாஜ்பாய், வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந் சிங்கா குடியரசுத் தலைவர் அப்துல் கலாம் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் ஆகியோருக்கு விளக்கிக் கூறுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (இ)

## யுத்த நிறுத்த..

போது, அந்த முகாமிற்கும்,இராணுவ வீரர்களின் பாதுகாப்பிற்காகவுமே அங்கு குழுமியிருந்தவர்களை கலைத்துவிட செயற்படவேண்டியிருந்தது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறியுள்ளதாக வட பகுதி இராணுவக் கட்டளைத் தளபதி சரத் பொன்சேகா ஒப்புக் கொண்டாரென செய்தியில் குறிப்பிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது அந்தச் செய்தி பொய்யானதென்பதுடன்,அவ்வாறு யாழ்.மாவட்ட கட்டளைத் தளபதி ஒப்புக் கொள்ளவில்லை என்றும், இராணுவத்தினர் யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறவில்லை என்றும் மீண்டும் ஞாபகப்படுத்துகின்றேன்.

ஆனாலும்,மேற்பட்ட சம்பவத்தின் போது பொது மக்களுக்கு காயம் ஏற்பட்டது. தேவையில்லாமல்,தேவையற்ற அவசியமற்ற இடத்தில் ஒன்று கூடியமையும் என்பதை அறியத் தருவதுடன் அது தொடர்பான விடயங்கள் அறிந்து கொள்ளப்படுமென யாழ்.பாதுகாப்பு கட்டளைத் தளபதி தெரிவித்துள்ளார்.

மேலும்,இனிமேல் இராணுவ முகாமருகில் பொது மக்கள் ஒன்று கூடுவதை தவிர்த்துக் கொள்வதால் இது போன்ற சம்பவங்கள் இடம் பெறுவதைத் தவிர்த்துக் கொள்ளமுடியும் என்பதையும் தெரிவித்துக் கொள்கின்றேன் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (உ)

## சங்கரியின்.....

இது குறித்து ஒன்றியம் நேற்று இரவு அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது. அவ்வறிக்கையின் முழு விபரம் நாளை முழுமையாகப் பிரசுரமாகும் (இ)

## இந்தியாவின்.....

அதிர்ச்சி அடைந்தேன். எதிர்க்கட்சிகளின் குற்றச்சாட்டுக்கள் தவறானவை

**இந்தியாவின் அனுசரணையின்றி பிரச்சினை தீரமாட்டாது**

இலங்கையின் இனப் பிரச்சினைத் தீர்வுக்கான சமாதான முயற்சிகளுக்கு ஜப்பானின் பங்களிப்புக் குறித்து இந்தியா புரிந்து கொண்டுள்ளது. இந்தியாவின் பங்களிப்பு இல்லாமல் இலங்கையின் இனப்பிரச்சினையைத் தீர்க்க முடியாது என்பதைப் பூரணமாக நம்புகிறேன்.

இந்நிலையில் இன்று இந்தியாவிற்கு விஜயம் செய்து எமது நிலைப்பாடு குறித்து இந்தியத் தலைவர்களுக்கு விளக்கமளிக்கவுள்ளேன்.

**நாடு நெருக்கடிக்குள் தள்ளப் பட்டுள்ளது**

நாடு தற்போது மிகவும் நெருக்கடியான சூழ்நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. இந்த வகையில் அண்மையில் மானிப்பாயிலும் நெடுந்தீவுக் கடற் பிரதேசத்திலும் இடம்பெற்ற அசம்பாவிதங்கள் சமாதானச் சூழ்நிலையில் பாதிப்பை ஏற்படுத்தினாலும் அரசும் விடுதலைப் புலிகளும் சமாதான முயற்சிகளில் அர்ப்பணிப்புடனும், உறுதியுடனும் இருக்கின்றனர். எனினும் இருசாராரும் இது விடயத்தில் கவனம் செலுத்த வேண்டும். இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளில் முதன்மை வகிக்கும் ஜப்பான் யூன் மாதம் அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடம்பெறவுள்ள ஆறாம் சுற்றுப் பேச்சுவார்த்தையை ஜப்பானின் டோக்கியோ நகரில் நடத்துவதற்கு தனது பூரண ஆதரவை வழங்கியுள்ளது.

எது எப்படியிருப்பினும் ஈராக்கின் பிரச்சினையில் அமெரிக்கா கொண்டுள்ள நிலைப்பாட்டில் அப்பிரச்சினை எதிர்வரும் யூன் மாதமளவில் ஓரளவுக்கு முடிவுக்கு கொண்டு வரப்பட்டுவிடும். இலங்கைக்கு வெளியே இடம்பெறும் இத்தகைய சம்பவங்கள் சமாதான முயற்சிகளிலிருந்து பொது மக்களையும் மற்றும் சர்வதேச சமூகத்தையும் திசை திருப்ப வைக்கக் கூடாது என்று பிரார்த்திப்பதாகவும் யசூஷி அகாஷி தெரிவித்துள்ளார். (ம)

## புலிகள் மீதான.....

இனப்பிரச்சினைக்கான தீர்வுஇலங்கையில் சகல இன மக்களினதும் அபிலாசைகளைப் பூர்த்தி செய்வதாக இருக்க வேண்டும்

இனப்பிரச்சினைக்குத் தீர்வு எட்டப்பட இலங்கை அரசாங்கம் பிளவுபடாமல் முழுமனதுடன் செயற்பட வேண்டுமென்றும் தெரிவித்த ஆம்டேஜ், தொடரும் இலங்கையின் சமாதான முயற்சிகளையும் வெகுவாகப் பாராட்டினார் (இ)

## மானிப்பாய்.....

செய்திருந்த கண்டனப் பேரணி வவுனியா குருமன்காட்டுப் பகுதியில் இருந்து ஆரம்பமாகி, மன்னார் வீதியூடாகச் சென்று வைரவப்புளியங் குளத்தில் இயங்கும் யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழு அலுவலகத்தில் கண்டன மகஜர்களைக் கையளித்தனர்.

நேற்று இடம்பெற்ற இந்த ஊர்வலத்தில் பெண்கள் பெருமளவில் கலந்து கொண்டனர் என்பது குறிப்பிடத்தக்கது. (வ)

## கணனிப் பயிற்சி நிலையம் திறப்பு

(யாழ்ப்பாணம்)

தமிழ் மாணவர் ஒன்றியத்தின் ஆதரவில் தமிழ் தகவல் தொழில் நுட்ப ஒருங்கிணைப்பு மையம், நாளை முற்பகல் 10.30 மணிக்கு வேலணை பழைய பஸ் கொம்பனிச் சந்தியில் கணனிப் பயிற்சி நிலையம் ஒன்றைத் திறக்கவுள்ளது. (இ)

## வெளிநாட்டில் வேலைவாய்ப்பு

(யாழ்ப்பாணம்)

சவூதி அரேபியா, குவைத், டுபாய், லெபனான், டோகா ஆகிய நாடுகளில் யாழ்ப்பாணப் பெண்கள் மற்றும் ஆண்களுக்கு உடனடி வேலை வாய்ப்புக்கள் வழங்க ஸ்ரீ லங்கா தொழிற் பயிற்சி அதிகார சபை ஏற்பாடுகளைச் செய்துள்ளது.

18 வயதுக்கும் 45 வயதுக்கும் இடைப்பட்ட ஆண் பெண் இருபாலருக்கும் இலவசப் பயணச் சீட்டு, உணவு, தங்குமிட வசதிகள் மற்றும் காப்புறுதி வசதிகளுடன் பயண ஏற்பாடுகள் செய்து கொடுக்கப் படுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

ஸ்ரீலங்கா தொழிற் பயிற்சி அதிகார சபையின் அனுசரணையுடன் சாரதிகள், வெல்டர், தச்சுத் தொழிலாளர், பிளாஸ்ரிக் பொலித்தீன் தொழில் நிபுணர், நீர்க்குழாய் இணைப்பாளர், மேசன், கணனி இயக்குநர், களஞ்சியக் காப்பாளர், உணவு விடுதிப் பணிப்பெண்கள், முன்பள்ளி ஆசிரியர்கள், உடற்பயிற்சி பயிற்றுவிப்பாளர், வரவேற்பாளர், உணவு விடுதிப் பணியாள், விடுதிச் சமையற்காரர் ஆகியோருக்கு வேலை வாய்ப்பு வெற்றிடங்கள் உள்ளன.

இது தொடர்பாக மேலதிக விபரங்களை இன்று காலை 9 மணி முதல் பிற்பகல் 4 மணிவரை கொக்குவில் தொழில் நுட்பக் கல்லூரியில் அறிந்து கொள்ள முடியும் (இ)

## விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் கலைமாணிப் பட்டப் படிப்பை வெளிவாரியாக மேற்கொள்ள விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

மார்ச் மாதம் 31ம் திகதி வரை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் என அறிவிக்கப் பட்டுள்ளது (உ-3)

## கலந்துரையாடல்

(மீசாலை)

மனித உரிமைகள் ஆணைக் குழு இன்று காலை 9 மணிக்கு சாவகச்சேரி கமநல சேவை நிலையத்தில் அனைவருக்கும் மனித உரிமைகள் சமாதான முறை வழியில் சிறுபான்மையினரின் உரிமைகள் எனும் செயற்திட்டத்தின் கீழ் கலந்துரையாடலொன்றை நடத்தவுள்ளது.

இக் கலந்துரையாடல் பிற்பகல் 4.30 மணிவரை இடம்பெறவுள்ளது. (இ-37)

## மினிவான் சாரதிகள் கைகலப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை யாழ் வீதி மினிவான் சாரதிகளுக்கும், அச்சுவேலி யாழ் வீதி மினிவான் சாரதிகளுக்கும் இடையில் நேற்று ஏற்பட்ட வாய்த்தர்க்கம் கைகலப்பு வரை சென்றது.

போட்டி அடிப்படையில் இரு தரப்பு மினிவான் சாரதிகளும் ஒருவரை முந்தி ஒருவர் ஏட்டிக்குப் போட்டியாக வாகனத்தைச் செலுத்துவதால் ஏற்பட்ட வாய்த்தர்க்கமே கைகலப்பு வரை சென்றது.

இதனையடுத்து பருத்தித்துறை மினிவான் சாரதிகள் குழுவும், அச்சுவேலி மினிவான் சாரதிகள் குழுவும் கோஷ்டி மோதலுக்குத் தயாராகியதனால் நிலைமை மோசமடைந்தது.

இதனையடுத்து விடுதலைப் புலிகளின் தலையீட்டினால் பெரும் கோஷ்டி மோதல் தவிர்க்கப்பட்டது. (இ-5)


**கண்ணீர் அஞ்சலி**

இலங்கை வங்கி. திருநெல்வேலி கிளை முகாமையாளரும்.
வதிரி அம்மன் ஆலய நிர்வாக உறுப்பினருமான

**இராசையா இரத்தினகோபாலு**

அவர்களின் மறைவுச் செய்தி கேட்டு ஆழ்ந்த அதிர்ச்சியும் வேதனையும் அடைகின்றோம். அவரின் பிரிவால் துயருறும் அன்னாரின் குடும்பத்தார்க்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

அராலி மத்தி
வட்டுக்கோட்டை

கந்தசாமி கோபாலசிங்கம்
சிற்பாச்சாரியார்

**இந்திய சாஸ்திரியார் வருகை**

முதன்முறையாக யாழ்ப்பாணப்புண்ணிய பூமிக்கு வருகை தந்துள்ளார். பரம்பரை ஜோதிடர்



புகழ் பெற்ற

**S.N.குமாரசாமி**

கைரேகை.ஜாதகம்.எண்கணிதம்மற்றும் திருமணத்தடை. தொழில் முன்னேற்றம் இன்மை மற்றும் எந்தப்பிரச்சினைகளுக்கும் நேரில் சந்திக்கவும்.
(காலை 8மணிமுதல் மாலை 5மணிவரை)

திரு S.N குமாரசாமி
ஸ்ரான்லி லொட்ஜ்
இல:711,கே.கே.எஸ் வீதி, யாழ்ப்பாணம்.
(யாழ். இந்துக் கல்லூரிக்கு அண்மையில்)
(C/5721)

**உடன் தேவை**

- ரைப்செற்றிங்
- ஈ-மெயில்
- இன்ரநெற்
- தொலைபேசி இயக்குவதில் அனுபவமுள்ள பெண் பிள்ளை தேவை

தொடர்பு :
குமரன் கொமினிகேஷன்
இல.27,சப்பல் ஸ்ரீட்
யாழ்ப்பாணம்
தொ.பே.இல. 2222765, 2225469

**தேவை**

பில் கிளாக், டிலிவறி கிளாக் தேவை. இருபாலரும் விண்ணப்பிக்கலாம். உடன் தொடர்பு கொள்ளவும்.
நாதன் சலவைத் தொழிலகம்
கே.கே.எஸ்.வீதி
சுன்னாகம் [6541]

**MEDICAL CHECK UP**
**வைத்திய பரிசோதனை**

நோய் வருமுன் காப்போம்
திடீர் மரணத்தைத் தவிர்ப்போம்

- 40 வயதிற்கு மேற்பட்ட நோய் உள்ள. நோய் அற்ற அனைவரும் இந்த MEDICAL CHECK UP ஐச் செய்வதன் மூலம் நோயற்ற சுகவாழ்வு வாழலாம்.
- X-RAY, ECG, சில முக்கிய இரத்தப் பரிசோதனைகள். சிறுநீர்ப்பரிசோதனை.

இலவச வைத்திய ஆலோசனையுடன் கூடிய MEDICAL CHECK UP குறைந்த கட்டணத்தில்! விபரங்களுக்கு நேரில்!
போக்குவரத்து வசதி கருதி

**சம்பந்தர் மொடேர்ன் கிளினிக்**
(அமுல் கிறீம் ஹவுஸ் அருகில்)
ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். [C/5602]

**மக்கள் வங்கி அறிவித்தல்**
**அடைவு நகை ஏல விற்பனை**
**(பருத்தித்துறைக் கிளை)**

15.02.2003ல் மக்கள் வங்கி ஸ்ரான்லி வீதிக் கிளையில் நடைபெற்ற மேற்படி ஏலவிற்பனை தொடர்ந்தும் இன்றைய தினம் 16.02.2003 ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியிலிருந்து பகல் 1.00 மணிவரை. நடைபெறும் என்பதனை அறியத் தருகின்றோம்

*பிராந்திய முகாமையாளர்*
*மக்கள் வங்கி*
*வடபிராந்தியம்*
*2003.02.16*
[C/5768]

**YOGI HOME SCIENCE ACADEMY**

**புதிய வகுப்புக்கள் 21.02.2003 அன்று ஆரம்பமாக உள்ளது.**

01. *Fabric Painting ( Special Course )*
02. கிறிஸ்டல் அழகுபொருள் செய்முறை
03. முக ஒப்பனையும் தலை அலங்காரங்களும்
இதில் செய்முறை பயிற்சிகளுடன் இந்திய, கண்டிய, குஜராட்டி, மடிசார் போன்ற வித்தியாசமாக சாறி கட்டும் முறைகளும் பயிற்சியளிக்கப்படும்

சேர விரும்புவோர் உடன் தொடர்பு கொள்ளவும்
75, அம்மன் வீதி
நல்லூர்
யாழ்ப்பாணம்
(நல்லூர் வீரமாகாளி அம்மன் கோயில் முன்பாக) [C/5769]

சுகாதார முறைப்படி தயாரிக்கப்பட்ட
**V.S.P லஞ் ஒயில்**
தயாரிப்பாளர்
**பரிமளா ஸ்ரோர்ஸ்**
26A, மானிப்பாய் வீதி, [C/4839] யாழ்ப்பாணம்.


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.02.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.